பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2049 பங்குனி 26 திங்கட்கிழமை 09.04.2018 கதிர் 155

## சிரேஷ்ட அமைச்சர்களின் பதவியைப் பறிக்கும் ரணில்

கொழும்பு, ஏப்.09

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்களான ஜோன் அமரதுங்க மற்றும் காமினி ஜயவிக்ரம பெரேரா ஆகியோரை அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கும் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன எனக் கூறப்படுகின்றது.

பக்கம் 18

# தீர்வுக்குக் கச்சிதமான நேரம் தைரியமாக முடிவெடுங்கள்!

### இனி இது ரகசியம் அல்ல!

இந்தப் பத்தியில் நான் எழுதுவது சில சமயங்களில் அதிகப் பிரசங்கித்தனமாக இருக்கின்றது என சில நண்பர்கள் வைகின்றார்கள்.

அதனால் இன்று ஒரு மாற்றம். எனது

பக்கம் 03

## பிரதமர் ரணிலுக்கு அனுப்பிய வாழ்த்தில் விக்கி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 09

**கூட்டு எதிரணியின் எதிர்பார்ப்புகள் எல்லாம் சிதைந்து போயிருக்கின்றன. தேசிய இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வு காண்பதற்கு தைரியமாக நடவடிக்கைகளை எடுப்பதற்கு கனகச்சிதமான நேரம் இதுதான். அதைத் துணிந்து முன்னெடுத்துத் தேசத் தலைவனாகக் கடமையாற்றுங்கள்.**

**- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தாம் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கின்றார்.**

பக்கம் 18

### இனி முதல்வர் வேட்பாளர் விக்கி அல்லர் என்ற

## சுமந்திரனின் அறிவிப்பு கூட்டமைப்பின் முடிவல்ல!

### புளொட் சித்தார்த்தன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.09

"அடுத்த வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு தமிழ்க் கூட்டமைப்பின் முதல்வர் வேட்பாளராகத் தற்போதைய முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் நிறுத்தப்படமாட்டார் என்ற

பக்கம் 18

## தமிழரின் தலைமையைக் காலம் விரைவில் அடையாளம் காட்டும்

### ஐங்கரநேசன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப்.09

"தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் அஞ்சல் ஓட்டம் போன்றது. எமது தலைவர்கள் பலர் அதைக் கைவிட்டாலும் அதைக் கையில் எடுத்து அடுத்த கட்டத்துக்குப் பயணிக்க எம்மிடம் எவரும் இல்லாமல் போகவில்லை. காலம் விரைவில் அத்தகைய தலைமையை அடையாளம் காட்டும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் மாகாண விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார். (விரிவு 2ஆம் பக்கத்தில்)

## சம்பந்தனுக்கு எதிராக வருகிறது பிரேரணை!

### மஹிந்த அணி அதிரடி

கொழும்பு, ஏப்.09

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க மஹிந்த அணி தீர்

பக்கம் 18

## புத்தாண்டில் புது அமைச்சரவை

### ரணிலை எதிர்த்த சு.கவின் 16 பேரும் பதவி துறப்பர்

கொழும்பு, ஏப்.09

சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் அமைச்சரவையை மறுசீரமைப்பது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே

பக்கம் 03

## எனக்கெதிராக பிரேரணை வரின் மஹிந்த அணியே மண் கவ்வும்!

### கூறுகிறார் சம்பந்தன்



கொழும்பு, ஏப்.09.

எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டால் அதன் மூலம் மஹிந்த அணியே மண் கவ்வும்.

- இவ்வாறு தெரிவித்தார் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன்.

தனக்கு எதிராக

பக்கம் 18

## காணாமல்போனோர் குறித்து முடிவெடுக்க முடியாத நிலைமை

### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.09

காணாமல்போனோர் தொடர்பில் சட்டரீதியாக உறுதிப்படுத்த முடியாத நிலை காணப்படுவதாகச் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

பக்கம் 18

## தகுதியற்றவர் சம்பந்தன்; தினேஷ் எம்.பி. காட்டம்

கொழும்பு, ஏப்.09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பதற்குத் தகுதியானவர் அல்லர் என மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ்

பக்கம் 18

## ரயில் - பிக்கப் விபத்தில் இளம்பெண் படுகாயம்

### கொடிகாமத்தில் சம்பவம்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஏப்.09

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு முன்னால் ரயில் மற்றும் வீதி

பக்கம் 18

## பூநகரி மருத்துவ அதிகாரியின் வாகனம் தடம்புரண்டு விபத்து

### அவரின் தாயார் படுகாயம்



யாழ்ப்பாணம், ஏப்.09

பூநகரி பிரதேச வைத்தியசாலை மருத்துவ அதிகாரியின் வாகனம் விபத்துக்குள்ளானதில் மருத்துவ அதிகாரியின் தாயார்

பக்கம் 18

## வடக்கு ஆளுநராக குரே தொடர்வார்



கொழும்பு, ஏப்.09

வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே அந்தப் பதவியில் நீடிப்பார் எனத் தெரிய வருகிறது.

மேல் மாகாண ஆளுநர் கே.சி. லோகேஸ்வரன் வடக்கு மாகாண

பக்கம் 18

காலைக்கதிர் Kalaikkathir



அரசியல்வாதிகள் இலட்சியங்களைக் குழி தோண்டிப் புதைத்தாலும்

# நியாயமான இலட்சியங்கள் ஒருபோதுமே சாவதில்லை!



கொழும்பு, ஏப். 09

விடுதலை அரசியலுக்கும் தேர்தல் அரசியலுக்கும் இடையில் பலவேறுபாடுகள் உள்ளன. விடுதலை அரசியலில் இலட்சியத்துக்காகப் போராளிகள் உயிர் துறக்கவும் தயங்கமாட்டார்கள்.

ஆனால், தேர்தல் அரசியலில் அரசியல்வாதிகள் நாற்காலிகளுக்காக இலட்சியங்களைக் குழிதோண்டிப் புதைக்கவும் தயங்கமாட்டார்கள்.

ஆனால், எவ்வளவுதான் ஆழக் குழிதோண்டிப் புதைத்தாலும் நியாயமான இலட்சியங்கள் ஒருபோதும் சாவதில்லை என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ.ஐங்கரநேசன் ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் நேதாஜி சனசமூகநிலையத்தின் ஆண்டு விழா நேற்றுமுன்தினம் நிலைய முன்றிலில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆயுத ரீதியாக முன்னெடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் பல அரசியல்வாதிகள் தமிழ்த்தேசிய அரசியலில் இருந்து வழுவ ஆரம்பித்து விட்டார்கள். தாங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் மறந்து, வதைபட்ட மக்களின் எதிர்பார்ப்புகளை எல்லாம் புறந்தள்ளி இலங்கைத் தேசியத்துக்குள் கரைய ஆரம்பித்து விட்டார்கள். நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் பலர் இலட்சியங்களைக் கைவிட ஆரம்பித்து விட்டார்கள் என்பதை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது.

எமது தலைவர்கள் நேற்றுவரை எவரையெல்லாம் துரோகிகளாக விமர்சித்தார்களோ இன்று ஆசனத்துக்காக அவர்களுடன் கூட்டு வைக்கத் தலைப்பட்டுள்ளார்கள்.



விடுதலைப் போராளிகளை அழிப்பதற்கு இராணுவத்துக்குத் துணைபோனவர்களுடன் கூட்டு. வடக்கில் ஆயிரம் விகாரைகளை அமைப்போம் என்று தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறிய யானைச் சின்னக்காரர்களுடன் கூட்டு. காணாமற்போனவர்கள் பற்றித் தன்னால் இனிஎதுவும் தெரிவிக்க இயலாது என்று ஜனாதிபதி கைவிரித்தபின்புங்கூட கைச் சின்னக்காரர்களுடன் கூட்டு. இவற்றையெல்லாம் பார்த்து மக்கள் குழம்பிப்போய் நிற்க, எமது தலைவர்களோ இவற்றைத் தங்களது அரசியல் சாணக்கியம் என்று வியாக்கியானம் செய்கிறார்கள்.

சனசமூக நிலையங்கள் எந்த அரசியல்வாதிகளிடம் இருந்தும், எந்தக் கட்சிக்காரர்களிடம் இருந்தும் அபிவிருத்திக்காக நிதியைப் பெறுவதில் தவறேதும் இல்லை. இந்த நிதி அரசியல்வாதிகளினதோ, அரசியல்கட்சிகளினதோ சொந்தப் பணமல்ல. மக்கள் செலுத்தும் வரிப்பணமே மீளவும் உங்கள் கைக்குவந்து சேருகிறது. ஆனால், கைநீட்டிக் காசு வாங்கிவிட்டோமே என்பதற்காக அரசியலில் அவர்கள் எல்லோருக்கும் நீங்கள் விசுவாசமாக

**ஐங்கரநேசன் தெரிவிப்பு**

வாக்களிக்க வேண்டிய அவசியமில்லை. அவ்வாறு செய்யவும் கூடாது.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் அஞ்சல் ஓட்டம் போன்றது. எமது தலைவர்கள் பலர் அதைக் கைவிட்டாலும் அதைக் கையில் எடுத்து அடுத்த கட்டத்துக்குப் பயணிக்க எம்மிடம் எவரும் இல்லாமல் போகவில்லை. காலம் விரைவில் அடையாளம் காட்டும். அரசாங்கம் திட்டமிட்டு ஏற்படுத்திவரும் சாதி, சமயப் பிளவுகளுக்குள் சிக்கி நாம் சிதறுண்டுபோகாமல் நாம் எல்லோரும் தமிழர்கள் என்று தமிழ்த் தேசியர்களாக ஒன்றுபட்டு நின்றால் எமது இலட்சியத்தை நாம் அடைந்தே தீரலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

வெளிநாட்டில் வேலை செய்ய

# போராளிகளுக்கு அரசு உதவிகள்!

கொழும்பு, ஏப். 09


புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் வெளிநாட்டுக்குச் சென்று வேலை வாய்ப்பினை பெற்றுக் கொள்வார்களாயின், அதற்கான செலவினை வழங்குவதற்கு எமது பணியகம் தயாராக இருக்கிறது என புனர்வாழ்வு ஆணையாளர் நாயகப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு – மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தம் காரணமாக வடக்கு – கிழக்கில் கலாசார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பல பின்னடைவுகளை நாங்கள் சந்தித்திருந்தோம்.

இந்த யுத்தம் காரணமாக, பலர் உயிர்களை இழந்திருந்தார்கள், அங்கவீனமுற்றிருந்தார்கள், விடுதலைப்புலி உறுப்பினர்களும் அங்கவீனமடைந்திருந்தார்கள். இவ்வாறு சமூகப் பின்னடைவுகள் பல இருந்தன.



மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 282 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

தற்போது புனர்வாழ்வுகளுக்காக மிகச்சிறியளவினரே எஞ்சியிருக்கிறார்கள். எதிர்காலத்திலும் இணைந்து கொள்பவர்களுடன் இந்த புனர்வாழ்வுச்செயற்பாடு இறுதிக் கட்டத்தை அடைந்து விடும். இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் முக்கியமான பணியாக கருதப்படுவது அவர்களைப் பொருளாதார ரீதியாக வலுப்படுத்துவதும் வாழ்வாதார ரீதியாக மேம்படுத்துவதுமாகும்.

பிரதமர் அலுவலகத்தினர், அரச சார்பற்ற நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு வடக்கு – கிழக்கு பிரதேசங்களில் இருக்கின்ற முன்னாள் போராளிகளை இனங்கண்டு அவர்களுக்கான உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

புனர்வாழ்வு பெற்றவர்கள் வெளிநாட்டுக்குச் சென்று வேலைவாய்ப்பினைப் பெற்றுக் கொள்வாராயின் அவருக்கான பயணச்சீட்டிற்கான செலவினைக்கூட வழங்குவதற்கு எமது பணியகம் தயாராக இருக்கிறது. எனவே, தொடர்ந்து எதிர்காலத்திலும் தேசிய நல்லிணக்க அமைச்சு, எமது புனர்வாழ்வு ஆணையாளர் பணியகத்தின் ஊடாகவும் அமைச்சின் ஊடாகவும், பிரதமரின் அலுவலகம், புனர்வாழ்வு அதிகாரசபை ஆகியவற்றின் மூலமாகவும் பல உதவிகளையும் செயற்பாடுகளையும் மேற்கொள்ளவுள்ளோம் என்று மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.

# கொழும்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளை பயிற்சிக்காக இணைத்துக் கொள்ள தீர்மானம்

கொழும்பு, ஏப். 09

வேலையற்ற பட்டதாரிகளை பயிற்சிக்காக இணைத்துக் கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை நேர்முகப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

நேர்முகப் பரீட்சை தொடர்பில் விண்ணப்பதாரிகளுக்கு மாவட்ட செயலாளர்கள் மூலம் அறிவிக்கப்படும் என தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சை மாவட்ட செயலகங்களில் நடைபெறும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி கொழும்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை கொழும்பு மாவட்ட செயலகத்திலும், மஹரகம பிரதேச செயலகத்திலும் நடத்தப்படவுள்ளது.

காலி மாவட்டத்தில் இந்த நேர்முகப் பரீட்சை ஹோல்டி ஹோலிலும், அம்பாறை மாவட்டத்திற்கான நேர்முகப் பரீட்சை ஹாடி உயர்தொழில்நுட்பவியல் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. அனுராதபுரத்தில் இந்தப் பரீட்சை வலிசிங்ஹ ஹரிச்சந்திர மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாதனை படைத்த மாணவியை தேடிச் சென்ற நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஏப். 09

2017ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் 8ஏ, 1பி சித்தி பெற்ற தமிழ் மாணவியான அபிஷாயினியை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேரில் சென்று சந்தித்துள்ளார்.

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்துக்கல்லூரியில் கல்வி பயிலும் மாற்றுத்திறனாளியான இவர் நடைபெற்று முடிந்த கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் 8ஏ, 1பி பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்திருந்தார்.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் 8ஏ, 1பி பெறுபேறுகளைப் பெற்ற அபிஷாயினியை சந்தித்து அவருடன் நேரத்தை செலவிட்டதால் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையிலுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு இவள் ஒரு முன்மாதிரியாக இருக்கின்றாள். இவளுடைய எதிர்கால கல்வி நடவடிக்கைகளுக்கு எனது வாழ்த்துக்கள் என நாமல் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன், அபிஷாயினியின் கல்வி நடவடிக்கைகளுக்காக கற்றல் உபகரணங்களையும் நாமல் வழங்கியுள்ளார். (க)

## கொல்கத்தா நைட் ரைடர்ஸிடம் வீழ்ந்தது பெங்களூரு சலஞ்சர்ஸ்



கொல்கத்தா, ஏப். 09

ஐ.பி.எல். ரி20 தொடரின் மூன்றாவது லீக் போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் நேற்றிரவு மோதின.

இந்த போட்டியில் கொல்கத்தா அணி 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பெங்களூரு அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

முன்னதாக முதலில் நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

இதனையடுத்து களமிறங்கிய பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்பிற்கு 176 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியில் அதிகபட்சமாக டிவில்லியர்ஸ் 44, மெக்குல்லம் 43 ஓட்டங்கள் எடுத்தனர்.

இதனையடுத்து 177 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா அணி களமிறங்கியது.

தொடர்ந்து ஆடிய கொல்கத்தா அணி 18.5 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 177 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

கொல்கத்தா அணியின் தலைவர் தினேஷ் கார்த்திக் 29 பந்துகளில் 35 ஓட்டங்களை எடுத்தார்.



## ஐ.பி.எல். ஆட்டத் தொடர்

# கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியிடம் தோற்றது டெல்லி டேர்டெவில்ஸ்

ஐ.பி.எல். 11ஆவது சீசனின் 2ஆவது ஆட்டம் சண்டிகரில் உள்ள ஐஎஸ் பிந்த்ரா மைதானத்தில் நேற்று நடைபெற்றது. டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்கெதிரான இந்த ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

இந்தப் போட்டியின் ஆரம்பத்தில் பஞ்சாப் அணியின் தலைவர் அஸ்வின் டாஸ் வென்று பீல்டிங் தேர்வு செய்தார்.

அதன்படி டெல்லி அணியின் கொலின் முன்றோ, கவுதம் காம்பீர் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். முன்றோ 4 ரன்னில் ஆட்டமிழக்க, கவுதம் காம்பீர் நிலைத்து நின்று விளையாடினார். அடுத்து வந்த ஷ்ரேயாஸ் அய்யர் (11), விஜய் சங்கர் (13) அடுத்தடுத்து வெளியேறினார்கள்.

பின்பு வந்த ரிப் பந்த் அதிரடியாக விளையாடி 13 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் அரைசதம் அடித்த காம்பீர் 42 பந்துகளில் 5 பவுண்டரி, ஒரு சிக்ஸருடன் 55 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அதன்பின் வந்த கிறிஸ் மோரிஸ் ஆட்டமிழக்காமல் 16 பந்துகளில் 27 ஓட்டங்கள் சேர்க்க டெல்லி டேர்டெவில்ஸ் அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 166 ஓட்டங்கள் எடுத்தது.

பஞ்சாப் அணியில் இடம் பிடித்துள்ள ஆப்கானிஸ்தான் வீரர் முஜீப் உர் ரஹ்மான் 4 ஓவரில் 28 ஓட்டங்கள் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.



பின்னர் 167 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் கேஎல் ராகுல், மயாங்க் அகர்வால் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். கேஎல் ராகுல் அதிரடியாக விளையாடி 14 பந்துகளில் அரைசதம் அடித்தார். இவரது அதிரடியால் பஞ்சாப் அணி 2.5 ஓவரில் 50 ஓட்டங்களை எடுத்தது.

அரைசதம் அடித்த கேஎல் ராகுல் 16 பந்துகளில் 6 பவுண்டரி, 4 சிக்ஸருடன் 51 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மறுமுனையில் விளையாடிய அகர்வால் 5 பந்துகளில் 1 சிக்ஸருடன் 7 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த யுவராஜ் சிங் 22 பந்துகளில் 12 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். ஆனால் 4ஆவது வீரராக களம் இறங்கிய கருண் நாயர் சிறப்பாக விளையாடி 33 பந்துகளில் 50 ஓட்டங்கள் சேர்த்தார்.

இருவரின் சிறப்பான அரைசதங்களால் மற்ற வீரர்கள் நிதானமாக விளையாடினார்கள். 5ஆவது விக்கெட்டுக்கு டேவிட் மில்லர் உடன் மார்கஸ் ஸ்டாய்னிஸ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி அணியை வெற்றி நோக்கி அழைத்துச் சென்றது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 18.5 ஓவர்களில் 167 ரன்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

## புத்தாண்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணக்கம் காணப்பட்டுள்ளது. இருவருக்கும் இடையே நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்த முடிவு எட்டப்பட்டது

இந்தத் தகவலை ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் கல்வி அமைச்சருமான அகிலவிராஜ் காரியவசம் கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்தபோது தெரிவித்தார்.

பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே நேற்று நடைபெற்ற சந்திப்பின்போது அமைச்சர்கள் மங்கள சமரவீர, மலிக் சமர விக்கிரம, விஜித அபேவர்த்தன, கபீர் காசிம் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்தச் சந்திப்பின்போது - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் அமைச்சர்களுடன் இணைந்து பணியாற்ற முடி யாது என்பதை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி உத்தியோகபூர்வமாக அறிவித்தது என அறியவந்தது.

இதேசமயம் -

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக - நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக - வாக்களித்த ஆறு அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் உட்பட சுதந்திரக் கட்சியின் 16 எம்.பிக்களும் தமது அமைச்சுப் பதவிகளில் இருந்து தங்களை விடுவிக்கும்படி ஜனாதிபதியிடம் கோரியிருக்கின்றார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகநூல் நண்பர் ஒருவர் யாழ்ப்பாணத்து நிலைமை குறித்துப் பதிந்த விடயத்தை அப்படியே இங்கு சேர்க்கப் போகின்றேன். இந்த எழுத்துக்குரிய முழுப் பெருமைக்கும் பேச்சுக்கும் திட்டுக்கும் வசவுக்கும் அந்த நண்பரே பொறுப்பு. நானல்லன். இனி அதனை வாசியுங்கள்:-

*யாழ்ப்பாணத்தில் 'மாலை' போடும் கலாசாரம் கொடி கட்டிப் பறக்கிறது.*

*வந்தவன், நிண்டவன், போனவன், இருந்தவன் எல்லாருக்கும் மாலை.*

*ஆரியாவுக்கும் மாலை!*

*கருணாஸுக்கும் மாலை!*

*அரசியல்வாதிகளுக்கும் மாலை!*

*ஒண்டு போட்டாலும் பறவாயில்லை...!*

*நாலு, அஞ்சு போட்டு அதுக்கு மேல பொ(ன்)னாடை வேற!*

*மாகாணத்து சபைக்காரரைப் பாத்து இப்ப பிரதேச சபை மைனர்மாரும் மாலையும் கழுத்தோடையுமாத்தான் போட்டோவுகள் போடுகினம்.*

*அதில இப்போதைக்கு top 10 வரிசையில் ... தொடர்ந்தும் ஆறு மாதமாக முதலாவது இடத்தில் நிக்கிறார் எங்களின் புதிய மாகாண கல்வி அமைச்சர் கௌரவ திரு. கந்தையா சர்வேஸ்வரன் அவர்கள்!*

*வாழ்த்துக்கள் அண்ணை!*

*நான் சும்மா சொல்லுறன் எண்டால் தயவுசெய்து அவரின் முகப்புத்தகத்தில போய்ப் பாருங்கோ!*

*கடந்த 6 மாதங்களில் சுமார் 1500 இக்கும் மேற்பட்ட மாலைகளோடு போட்டோ போட்டு 'யாழ்ப்பாண சாதனைப் புத்தகத்தில்' இடம் பிடித்துள்ளார்.*

*இதை முறியடிக்க திரு. விக்னேஸ்வரன் முயன்றும் தோற்றுப் போனார்.*

*கடந்த ஆறு மாதத்தில் -*

*மதிப்புக்குரிய மாகாண கல்வி அமைச்சருக்கு போட்ட மாலைக் காசையும் வரவேற்பு செலவையும் கணக்குப் பாத்தா....*

*ஒரு பள்ளிக்கூடம் கட்டலாம் என்று திரு. பொதுசனம் புறுபுறுக்கிறாள்.*

*மதிப்புக்குரிய கௌரவ அமைச்சர் திரு. சர்வேஸ்வரன் அவர்களும் அவரின் கூடத்திரியும் தொண்டர்களும் பொது சனத்தின் புறுபுறுப்புகளை கவனத்தில் கொண்டால் சிறப்பாய் இருக்கும்.*

*ஏனெனில் நீங்கள் செய்யும் நல்லவிடயங்களும் இப்படியான 'கோமாளிக்கூத்துகளால்' அடிபட்டுப்போகும்.*

*நிற்க,*

*மதிப்புக்குரிய பாடசாலை அதிபர்களே!*

*யாழ்பாணத்தில் உள்ள பாடசாலை அதிபர்கள் கனபேர் வாறவனுக்கு மாலை போட்டு 'வாளி வைப்பதிலேயே' தங்கள் பதவிஉயர்வு கிடைத்துவிடும் என்று நினைக்கிறார்கள்!*

*'வணக்கம்' சொல்லி நெஞ்சை நிமிர்த்தி வரவேற்கும் துணிவான அதிபர்களை தேடிக் கொண்டிருக்கிறோம். உங்களைப் பார்த்துத்தான் பள்ளிக்கூடத்தில படிக்கிற பொடியள் 'பழக்கவழக்கங்களை' பழகுங்கள் என்பதை மனதில் கொண்டு கடமையுணர்வோடு நெஞ்சு நிமிர்ந்து நடவுங்கள்!*

*நீங்கள் யாருக்கும் எந்த வகையிலும் குறைந்தவர்கள் அல்லர்!*

*விளங்கினால் சரி.*

*கடைசியா இன்னொண்டு....!*

*ஒரு பாடசாலையின் விளையாட்டுப்போட்டியிலோ அல்லது கட்டடத் திறப்பு விழாவிலோ -*

*பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் தகுதி அந்த பாடசாலையின் வளர்ச்சியில் பாடுபட்ட அதிபர்களுக்கும் அல்லது ஆசிரியர்களுக்கும் மட்டுமே உள்ளது.*

*அரசியல்வாதிகள் சிறப்பு விருந்தினர்களாக மட்டுமே கலந்துகொள்ளத் தகுதியுடையவர்கள்.*

*இதை பல காலமாக பல தடவை சொல்லியும் கன அதிபர்கள் இப்பவும் அதை காதில் போட்டுக்கொள்வதாய் இல்லை!*

*அரசியல்வாதிகளும் அதை கேட்பதாயும் இல்லை!*

*இனி ஒவ்வொருத்தரா போட்டோ போட்டு 'கிழிய கிழிய' கேள்வி கேட்பதை தவிர, வேற வழியில்லை எண்டு திரு. பொது சனம் கோபத்துடன் சொல்கிறாள்.*

*அதில வேற அண்டைக்கு ஒரு பிரதேச சபை நிகழ்வில் ஆரம்பத்தில போட்ட மாலையோடையே பந்தியில இருந்து சோறும் தின்னுதுகள்!*

*'கண்டறியாதவன் பெண்டிலைக் கண்டால் காடுமேடெல்லாம் கொண்டு திரிவானாம்' எண்ட பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.*

-இவ்வளவும் அந்த முகநூல் நண்பரின் கைவண்ணம். அதைச் 'சுட்டு' இன்று எனது பொறுப்பைச் சமாளித்துக் கொண்டேன்.

-மின்னல்-




# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இந்த அறிவிப்பு அவசியமா?

வடக்கு மாகாண சபைக்கு இனி வரவிருக்கும் தேர்தலில் முதல்வர் வேட்பாளராகத் தற்போதைய முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுத்தாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் விசேட செய்தியாளர் மாநாடு ஒன்றைக் கூட்டி இதை அறிவித்திருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடாகவே இதனை அவர் அறிவித்திருக்கின்றார். கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவக் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஏனைய பங்காளிக் கட்சிகளுடன் கூடி, இது பற்றி ஆராய்ந்து ஒரு தீர்மானத்தை எடுத்த நிலையில், அதனைச் சுமந்திரன் அறிவித்திருந்தாரா அல்லது இவ்விடயம் குறித்து ஊடகங்களில் வெளியான செய்திகளுக்கு முந்திக் கொண்டு பதில் அறிவிப்பை அவர் விடுத்தாரா என்பது தெரியவில்லை.

இந்த முதல்வர் பதவிக்கு நாம் வலிந்து நீதியரசர் விக்னேஸ்வரனை அழைத்து வந்தபோது இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே அப்பதவியில் இருப்பேன் என்ற பீடிகையோடு, பிகு பண்ணித்தான் அந்தப் பதவிக்கு அவர் வந்தார். இப்போது ஐந்தாண்டுகளுக்கு மேலும் அவரை வருந்தி நாம் வைத்திருப்பது நல்லதல்ல என்ற சாரப்பட சுமந்திரன் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

அப்படி முதல்வர் சொன்னமைக்குப் பலர் சாட்சியங்களாக உள்ளனர் என்று அவர் கூறுகின்றார். வேறு தரப்புகளும் அதனை ஊர்ஜிதப்படுத்துகின்றன.

முதல்வர் விக்னேஸ்வரன் அப்படிக் கூறியிருப்பார், இப்போது மனதை மாற்றிக்கொண்டு அந்தப் பதவியில் தொடர்கிறார் என்றுதான் எமக்கும் தோன்றுகின்றது. முதலமைச்சர் விக்னேஸ்வரன் இவ்விடயத்தில் தமது நிலைப்பாட்டைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தும் வரை அப்படித்தான் கருத வேண்டியிருக்கும்.

ஆனால், ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். 2009 யுத்தத்தின் முடிவில் சட்டத்துறையிலிருந்து தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மூலம் அரசியலுக்கு சம்பந்தனால் இழுத்து வரப்பட்ட சுமந்திரன் போலவே, 2013 வடக்கு மாகாண சபைத் தேர்தலின் போது நீதித்துறையிலிருந்து ஓய்வு பெற்றிருந்த விக்னேஸ்வரன், அதே சம்பந்தனால் இந்தப் பதவிக்கும் அரசியலுக்கும் இழுத்து வரப்பட்டார். வடக்கு அரசியலைப் பொறுத்தவரை சுமந்திரன், விக்னேஸ்வரன் ஆகிய இருவருமே சட்டத்துறையிலிருந்து 'இறக்குமதி' செய்யப்பட்டவர்கள்தான்.

தாம் இத்துறைக்கு - இப்பதவிக்கு - கொழும்பிலிருந்து 'இறக்குமதி' செய்யப்பட்டவர் என்பதை அடிக்கடி ஒப்புக்கொள்ளும் முதலமைச்சர் விக்னேஸ்வரன், இங்கு வந்து இந்த மக்களுடன் வாழும்போதுதான் - அவர்களுடன் சேர்ந்து அரசியல் பயணத்தைத் தொடரும்போதுதான் - அவர்களின் கஷ்ட நஷ்டங்கள், துன்ப துயரங்கள், அவலங்கள், நெருக்கடிகள் போன்றவற்றைத் தம்மால் உணர்ந்து கொள்ள முடிந்ததாகவும் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டியும் வருகின்றார்.

அது மாத்திரமல்ல, நமது அரசியல் தலைவர்கள் என்று கூறிக்கொள்வோர் தென்னிலங்கை சிங்களத் தலைமைகளின் அழுத்தத்துக்கு அடிபணிந்து, சோரம் போய், அவர்கள் போடும் பிச்சைத் தீர்வுக்குக் காத்திருக்கின்ற அவலநிலை குறித்தும் இப்போதெல்லாம் தமது அறிக்கைகள், அறிவிப்புகள், பேச்சுகளில் அவர் திரும்பத் திரும்பக் கோடிகாட்டியும் வருகின்றார்.

இந்த உண்மைகள் கூட, யதார்த்தங்கள் கூட, இப்போது இந்தப் பதவிக்கு வந்து விடயங்களைத் தாம் நேரடியாகக் கையாளத் தொடங்கிய பின்னரே தமக்கு நன்கு புரியத் தொடங்கின என்றவாறும் அவர் உணர்த்தி வருகின்றார்.

அதுதான் நிலைமை என்றால் இரண்டு வருடகாலமே பதவி வகிப்பேன் என்று வந்தவர், இப்போது இந்த மக்களுடன் - இந்த மக்களுக்காக - தொடர்ந்தும் அரசியல் செய்யவும், அரசியலில் இருக்கவும் விரும்பக்கூடும். அவரிடமிருந்து வெளிப்படும் அரசியல் சமிக்ஞைகள் அதனைத்தான் உணர்த்துகின்றன என்பது அவதானிகளின் கணிப்பீடு.

அப்படி அவர் அரசியலில் நீடிப்பதை விரும்பாத, நீடிக்க விடாத ஓர் அறிவிப்பாகவே கூட்டமைப்பின் பேச்சாளரின் பிரகடனத்தை நோக்க முடியும்.

கூட்டமைப்புக் கட்சிகள் கூடி ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டிய முக்கிய விடயத்தை, இவ்வளவு அவசரப்பட்டுத் தன்னிச்சையாக சுமந்திரன் அறிவிக்கின்றமையையும், அதை அறிவிக்கின்ற சந்தர்ப்ப சூழல்களும், இன்னொரு நெருக்கடிக் கட்டத்தை நோக்கித் தமிழரின் அரசியல் - குறிப்பாகக் கூட்டமைப்பின் அரசியல் - திரும்பப் போகின்றது என்பதற்குக் கட்டியம் கூறுபவையாகவே இருக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்புப் பெரும் பின்னடைவுகளைச் சந்திப்பதற்கு யார், யாரின், என்னென்ன அரசியல் 'திமிர்த்தனங்கள்', அணுகுமுறைகள், செயற்போக்குகள் காரணமாக இருந்தனவோ, அவை வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னோட்டமாக இப்போதே மீண்டும் கட்டவிழத் தொடங்கி விட்டனவோ என்ற சந்தேகத்தையே இந்த ஒருதலைப்பட்சமான, தன்னிச்சையான, அவசரப்பட்ட பிரகடன அறிவிப்பு தோற்றுவித்து நிற்கின்றது.

திருத்துவதும் திருந்திக்கொள்வதும் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பைப் பொறுத்தது. சம்பந்தன் ஐயா தலையிட்டுக் கவனித்தால் கூட்டமைப்பின் உயர்வுக்கு அது வழிகோலும்.

# யுத்த வெற்றிக் கொண்டாட்டங்கள் இம்முறையும் நடத்தப்படமாட்டா!

## நல்லாட்சி அரசு முடிவு



கொழும்பு, ஏப். 09

விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை கொண்டாடும் வகையிலான எந்தவொரு நிகழ்வையும் இந்த ஆண்டிலும் நடத்துவதில்லை என்று பிரதமர் ரணில் – ஜனாதிபதி மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் அறிமுகம் செய்யப்பட்ட யுத்த வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வை ரத்து செய்தது.

தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்த வருடமும் அந்த நிகழ்வுகளை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் முடிவெடுத்திருப்பதாகவும், இது தொடர்பாக கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு கடிதம் மூலம் அறியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

மே மாதம் 19ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டுவந்த போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் இந்த வருடம் நடத்தப்படாது என்பதை இலங்கை அரசாங்கம் எழுத்துமூலம் ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரணிலுக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு கோடிக் கணக்கில் பணம் லஞ்சமாம்!

## தயாசிறி குற்றம் சாட்டுகிறார்

தனக்கு எதிராக முன்வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்க, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க கோடிக்கணக்கில் ரூபா பணத்தை இலஞ்சமாக வழங்கினார் என அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். பிரதமருக்கு ஆதரவாக வாக்களித்த ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் சுமார் ஐந்து கோடி ரூபா பணம் வழங்கப்பட்டதாக அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

ரணிலிடம் பணம் பெற்றுக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இது குறித்து அம்பலப்படுத்தினார் என தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார். அந்த உறுப்பினருக்கு இருந்த கடன் தொல்லை காரணமாகவே அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ள நேர்ந்ததாக அவர் தன்னிடம் கூறினார் எனவும் தயாசிறி சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கொடுக்கல் – வாங்கல் விடயத்தில் மத்திய வங்கி ஊழலில் தொடர்புபட்டவர்கள் சம்பந்தப்பட்டிருக்கலாம் எனவும், அவற்றைக் கூடிய விரைவில் ஆதாரத்துடன் தாம் வெளிப்படுத்துவார் எனவும் தயாசிறி தெரிவித்துள்ளார்.

# நந்திக்கடல் களப்பில் இரண்டு மீனவர்கள் கைது

முல்லைத்தீவு, ஏப். 09

முல்லைத்தீவு– நந்திக்கடல் களப்பில் தடைசெய்யப்பட்டுள்ள மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட இரண்டு மீனவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் இருந்து தடை செய்யப்பட்ட 800 மீன்பிடிவலைக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளன.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைக்கூடுகளைக் கொண்டு நந்திக்கடல் களப்பில் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர் என முல்லைத்தீவு மீன்பிடி பரிசோதகர் அலுவலகத்திற்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து, இந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமான இந்த மீன்பிடி வலைக்கூடுகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடும் போது மீன் முட்டைகள் அழிந்து போகும் என்பதுடன், மீன் குஞ்சுகளும் வலையில் சிக்கும் என்பதால், மீன்களின் எண்ணிக்கையும் குறைந்து போகும்.

இதன் காரணமாகவே இந்தக் கூடுகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். பொலிஸார் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# யாழில் நகைக் கடைகளில் தொடர்ந்து திருட்டில் ஈடுபட்டு வந்த பெண் கைது

யாழ்ப்பாணத்தில் நகைக் கடைகளில் நீண்ட நாள்களாக திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுவந்தவர்என்றுகூறப்படும் சிங்களப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று யாழ். பதில் நீதிவான் முன்னிலையில் அந்தப் பெண் ஆஜர் செய்யப்பட்டபோது அவரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கண்டியைச் சேர்ந்த இந்தப் பெண் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக் கடையில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்ட நிலையில், நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தப் பெண்ணை கடைக்குள் பூட்டி வைத்த நகைக் கடை உரிமையாளர்கள், பொலிஸாருக்கு அறிவித்தமையைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் இந்தப் பெண்ணைகைதுசெய்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக நகைக்கடைகளுக்கு வரும் இந்தப் பெண், நகைகளைக் கொள்வனவு செய்வது போல பல நகைகளையும் பார்வையிடுவது வழக்கம்.

இதன் பின்னர் அவற்றில் ஒன்றாவது காணாமல் போகின்ற அதேவேளை, பல கடைகளில் இவ்வாறு திருட்டுப் போனமை தெரியவந்தது.

இதுதொடர்பில் ஏனைய நகைக்கடைக்காரர்களுக்கும் புகைப்படத்துடன் தகவல் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சுமார் 40 வயது மதிக்கத்தக்க மேற்படி பெண் கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக்கடை ஒன்றில் திருட முற்பட்டபோது கையும் களவுமாக பிடிபட்டுள்ளார்.

அவரைச் சம்பந்தப்பட்ட நகைக் கடையினர் கண்டித்து எச்சரித்த பின்னர் விடுவித்தனர்.

ஆனால், அது பற்றி அறிந்த பிறிதொரு நகைக் கடைக்காரர், அந்தப் பெண்ணே தமது கடையில் சுமார் ஐந்து பவுண் நகைகளைத் திருடியவர் எனத் தெரிவித்து, ஆள்களை நகரில் நாலாபுறமும் விட்டுத் தேடி அந்தப் பெண்ணைக் கண்டு பிடித்துள்ளனர்.

தமது கடைக்கு அந்தப் பெண்ணை அழைத்து வந்து விசாரித்துள்ளார். அந்தப் பெண் மறுத்த போது, கடையின் சி.சி.ரி.வி. கமரா பதிவுகளைப் போட்டுக் காட்டி நிரூபித்ததும் தாமே களவெடுத்தார் என்பதை அவர் ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து, பொலிஸுக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் அந்தப் பெண்ணைக் கைது செய்தனர். (உ)

## நாளை

10.04.2018
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : திருவோணம் மு.இ. 10.40 வரை
திதி : தசமி மாலை. 5.51 வரை
சுபநேரம் : 10.36 – 12.06 வரை
இராகுகாலம் : 3.06 – 4.36 வரை

# நிலைபேறா அபிவிருத்தி இலக்கைப் பூர்த்தியாக்க பாடசாலை சமூகத்தை தொடர்புபடுத்த திட்டம்

ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ள நிலை பேறா அபிவிருத்திக்கான இலக்கை பூர்த்தி செய்வதற்காக பாடசாலை சமூகத்தை தொடர்புபடுத்திய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்திக்கான இலங்கை அலுவலகம், கல்வி அமைச்சு, ஜனாதிபதி செயலகம், ஹற்றன் நஷனல் வங்கி ஆகியவற்றை இணைத்து இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இதற்காக நாடு முழுவதிலுமுள்ள அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 25 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த பாடசாலைகள், சமர்ப்பித்துள்ள திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்காக நிதி வழங்குதல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கான வேலைத் திட்டம் கடந்த வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பான வைபவத்தில் உரை நிகழ்த்திய கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி நிலைபேறா அபிவிருத்தி இலக்கை பூர்த்தி செய்வதற்கு இதன் மூலம் பெரும் பங்களிப்பு கிடைக்கும் என்று சுட்டிக்காட்டினார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் திருமதி சிம் ரிங் சிங் கருத்துத் தெரிவிக்கையில் இந்த அபிவிருத்தி இலக்கை பூர்த்தி செய்வதில் அனைவருக்கும் உள்ள பொறுப்பைச் சுட்டிக்காட்டினார்.

## 50 சமுர்த்தி உற்பத்தி மாதிரி கிராமங்கள்

கொழும்பு, ஏப். 09

நாடளாவிய ரீதியில் 50 சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராமங்களை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஒரு மாவட்டத்தில் இரண்டு சமுர்த்தி உற்பத்தி மாதிரிக் கிராமம் என்ற அடிப்படையில் 25 மாவட்டங்களில் ஏற்படுத்தப்படவுள்ளன.


இந்தத் திட்டத்தின் ஊடாக விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்திட்டம், சிறிய நடுத்தர சுயதொழில் ஆகியன முன்னெடுக்கப்படவுள்ளன.

## சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு; மீளாய்வு கால அவகாசம் நீடிப்பு

கொழும்பு, ஏப்.09

இலங்கையில் கடந்த ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்குரிய மீளாய்வு விண்ணப்பத்துக்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது எனத் தகவல் கிடைத்துள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த கால அவகாசமே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.



இந்தப் பரீட்சை மீளாய்வு விண்ணப்பத்துக்கான கால அவகாசம் நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்த நிலையிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த காலத்தை எதிர்வரும் 12 ஆம் திகதிவரை நீடிப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த மாதம் 27 ஆம் திகதி மேற்படி பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (க)



காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் விசேட சத்திர சிகிச்சை விடுதி தொகுதிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையில் நடைபெற்றது.

வைத்தியசாலை வளாகத்தில் அண்மையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. விடுதி தொகுதி பத்து மாடிகளைக் கொண்டதாகும். இதற்காக 69 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாகன அனுமதிப்பத்திரம் பெறுவது தொடர்பில் புதிய நடைமுறைகள்

வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக பரீட்சார்த்திகள் முகம் கொடுக்கும் எழுத்து மூலப் பரீட்சையை டிஜிட்டல் முறைமையின் கீழ் நடாத்துவதற்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.



இந்த புதிய நடவடிக்கை எதிர்வரும் மே மாதம் முதல் அமுலுக்கு வரும் என திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜகத் சந்திரசிறி இதனை அறிவித்துள்ளார்.

ஆரம்ப கட்டமாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வேரஹர காரியாலயத்தில் இந்த புதிய முறைமையை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 150 பேர் இந்தப் பரீட்சைக்கு முகம் கொடுக்க முடியுமான வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சை மோசடிகளைத் தவிர்த்தல், பரீட்சைப் பெறுபேறுகளை விரைவாக வெளியிடல் என்பன இந்தப் புதிய டிஜிட்டல் முறைமையின் கீழ் முடியும் எனவும் ஆணையாளர் நாயகம் மேலும் கூறியுள்ளார்.

## அரச உத்தியோகத்தர்களுக்கு முன்கூட்டியே இன்று சம்பளம்

கொழும்பு, ஏப். 09

தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் ஏப்ரல் மாத சம்பளம் முன்கூட்டியே இன்று 09 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்கள் இன்றைய தினம் சம்பளம் பெறவுள்ளனர். அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு புத்தாண்டு பண்டிகை முற்பணமாக ரூபா 10 ஆயிரம் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.


இவ்வாறு வழங்கப்பட்ட பண்டிகை முற்பணம் வட்டியற்ற 8 சமபங்கு மாதங்களில் மீள அறவிடப்படவுள்ளது. (க)

## பாணந்துறையில் கார் விபத்து!

கொழும்பு, ஏப். 09

பாணந்துறை, சரிக்கமுல்ல பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் சாரதி மயிரிழையில் உயிர்தப்பியுள்ளார்.

வேகமாக வந்த கார் ஒன்று கட்டுப்பாட்டை மீறி அருகில் இருந்த கடையுடன் மோதி நொருங்கியுள்ளது என சம்பவ இடத்தில் இருந்தவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



## கட்டடம் இடிந்து வீழ்ந்து இருவர் படுகாயம்

கொழும்பு, ஏப். 09

தம்புள்ளை-பொருளாதார மத்திய நிலையத்திற்கு பின்னால் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்த மூன்று மாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது. தனியார் வர்த்தக கட்டடம் ஒன்றின் ஒரு பகுதி இவ்வாறு இடிந்து விழுந்துள்ளது.

இந்தக் கட்டடத்தின் மூன்றாம் மாடிக்கு கொங்கிறீட் இட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளது என பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

கட்டடத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த இருவர் சம்பவத்தில் காயமடைந்துள்ள நிலையில் தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலும், சம்பவம் தொடர்பில் தம்புள்ளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (க)

## பிரபல சிங்கள நடிகை மரணம்

கொழும்பு, ஏப். 09

பிரபல நடிகையும், பின்னணிக் குரல் கலைஞருமான ரத்னாவலி கெகுணவெல தனது 87 ஆவது வயதில் நேற்று முன்தினம் மரணமடைந்துள்ளார்.

அவரது உடல் இரத்மலானையில் உள்ள அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. அவரது இறுதிக் கிரியைகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

1951 ஆம் ஆண்டு டிசெம்பர் 21 ஆம் திகதி வானொலி நாடகமொன்றில் பின்னணிக் குரல் கலைஞராக கலைத்துறைக்குள் பிரவேசித்த இவர், பிரபல வானொலி நாடகமான முவன் பெலஸ்ஸே மெனிக்கே என்ற நாடகத்தின் பெயர் கொண்டு செல்லமாக அழைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கரடித் தாக்குதல் பற்றி அறிக்கை கோரும் கிழக்கு மாகாண ஆளுநர்

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 97ஆம் கட்டை சிராஜ் நகர் பழக்கடை அருகில் கடந்த வியாழக்கிழமை 4 நபர்களை கரடி தாக்கியதில் நால்வரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விடயம் தொடர்பில் உடனடியாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம திருகோணமலை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.



இது தொடர்பாகக் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம கூறியவை வருமாறு:-

தாக்குதல் நடத்திய கரடியை சுட்டுக் கொல்வதற்கு இடமளியாது உரிய முறைப்படி அதனைக் கைப் பற்றியிருக்க வேண்டும். மேலும் கரடி சுட்டு வீழ்த்தப் பட்டமை தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமாறும் வனஜீவராசிகள் அமைச்சுக்கும் பணிப்புரை விடுத்துள்ளேன்.

இவ் விடயம் தொடர்பிலான உரிய விசாரணைகளை நடத்தித் தனக்கு அறிக்கை ஒன்றை உடனடியாக சமர்ப்பிக்குமாறு கேட் டுள்ளதுடன், இதற்காக உரிய நடவடிக்கைகளையும் திருகோணமலை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் வனஜீவராசிகள் அமைச்சு நடவடிக்கைகளை ஆராய்ந்து அறிக்கைளை சமர்ப்பிப்பர் எனவும் தெரிவித்துள்ளார்.



# ஓட்டமாவடிப் பிரதேச சபையின் தவிசாளர் பதவி சுழற்சி முறையில்

மட்டக்களப்பு, ஏப்.09

ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் பதவி இரண்டு வருடங்களுக்கு ஒருவர் என்ற அடிப் படையில் வழங்கப்படும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தவிசாளரும், கிராமிய பொருளாதார பிரதி அமைச்சருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்துள்ளார்.



ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உதவித் தவிசாளரைத் தெரிவு செய்யும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை ஓட்டமாவடி பிரதேச சபையில் இடம்பெற்றதன் பின்னர் பிரதி அமைச்சரின் இல்லத்தில் தற்போதைய தவிசாளர் ஐ.ரி.அஸ்மிக்கும், பிரதேசசபை உறுப்பினர் ஏ.எம்.நௌபருக்கும் இடையில் இடம்பெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய கட்சிகளுடன் இணைந்து ஓட்டமாவடி பிரதேச சபையின் ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

அந்த வகையில் கூட்டாட்சியின் படி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிக்கு தவிசாளர் பதவியும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு உப தவிசாளர் பதவியும் வழங்கப்படும் என்றும், கட்சிகளுக்கிடையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய அகில இலங்கை மக்கள் காங்கிரஸிற்கான தவிசாளர் பதவி சுழற்சி முறையில் முதல் இரண்டு வருடங்களுக்கு ஐ.ரி.அஸ்மிக்கும், மிகுதி இரண்டு வருடம் ஏ.எம். நௌபருக்கும் வழங்கப்படும் என்ற ஒப்பந்தத்தில் இருவரும் கைச்சாத்திட்டனர் எனத் தெரிவித்துள்ளார்.

# பெரியதொரு புற்றுநோயாக உருவெடுத்துள்ள மதமாற்றம்

## ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர்

அம்பாறை, ஏப்.09

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் மதமாற்றம் என்பது பெரியதொரு புற்றுநோயாக உருவெடுத்துள்ளது என அக்கரைப் பற்று, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வே.ஜெகதீசன் தெரிவித்துள்ளார்.

சிவநெறி அறப்பணி மன்றத்தின் நான்காம் ஆண்டு நிறைவும், அறக்கொடை விழாவும் நேற்றுமுன்தினம் கல்முனையில் உள்ள நால்வர் கோட்ட கேட்போர் கூடத்தில் சிவநெறி அறப்பணி மன்றத்தலைவர் சைவவித்தகர் யோ. கஜேந்திரா தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். மேலும் கூறுகையில் -

தமிழ் மக்களை பொறுத்தவரையில் வறுமை என்பது ஒரு கொடிய நோயாகவே இருந்து வருகின்றது. அதன் காரணமாக குடும்பங்களின் வாழ்வாதாரங்கள் சீரழிக்கப்பட்டு கல்வியைத் தொடர்ந்து கற்க முடியாத ஒரு நிலை காணப்படுகின்றது.

அவ்வாறான குடும்பங்களை இனங்கண்டு அவர்களது வாழ்வாதாரங்களை கட்டியெழுப்புவதற்கும், பிள்ளைகளின் கல்விச் செயற்பாட்டிற்கும் புலம்பெயர் அமைப்புக்கள் பல உதவிகளை செய்து வருகின்றன.

அந்த உதவிகளை



பெற்றுத் தங்களது குடும்பங்களை உயர் நிலைக்கு கொண்டுவர பாடுபட வேண்டியது இங்குள்ள அனைவரதும் கட்டாய கடமையாகும்.

மேலும், அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களை பொறுத்தவரையில் மதமாற்றம் என்பது கொடிய புற்றுநோய் போன்று பீடித்து நிற்கின்றது. இதற்கு முழுமையான காரணம் அவர்களிடத்தே உள்ள வறுமை நிலையாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# மஹிந்த ஆட்சிக் கால அட்டூழியங்களை அம்பலப்படுத்துகிறார் வியாழேந்திரன்

மஹிந்தவின் ஆட்சிக்காலத்தில் 45 ஊடகவியலாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - பார் வீதியில் உள்ள கேம்பிறிஜ் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு போட்டி நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். இதன்போது மேலும் கூறுகையில் -

இந்த கூழவாடி சந்தியில் 2004ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி இலங்கையின் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசன் படுகொலை செய்யப்பட்டமையை நாங்கள் மறக்க முடியாது.

கடந்த காலங்களில் ஊடகத்திற்கு எதிரான அடக்குமுறை நிகழ்ந்தது. ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு இடம்பெயர்ந்தார்கள். ஊடகத்தினுடைய குரல் நசுக்கப்பட்டது. மக்கள் உண்மையை தெரிந்து கொள்ள முடியாமல் இருந்தார்கள்.

இந்த நாட்டிலே நல்ல சிந்தனை உள்ள மனிதர்கள் இல்லை. கடந்த காலத்திலே மஹிந்த அரசாங்கம் இருக்கும் போது 45 ஊடகவியலாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

பலர் கடத்தப்பட்டுள்ளனர், பலர் காணாமற் போயுள்ளனர். இவற்றை எண்ணிப்பார்க்கும் போது ஊடக சுதந்திரம் கேள்விக்குறியாக மாறியுள்ளது.

ஆனாலும், இந்த ஆட்சி மாற்றத்தை கொண்டு வந்ததன் பிற்பாடும் கூட ஊடக சுதந்திரத்தை நசுக்குகின்ற சில செயற்பாடுகளை இந்த ஆட்சியை சேர்ந்தவர்கள் செய்வதை பார்க்கும் போது மீண்டும் கடந்த காலங்களில் நிகழ்ந்த ஐயப்பாட்டுக்குள் சென்று விடுவோமோ என்று வேதனையாக இருக்கின்றது எனத் தெரிவித்துள்ளார்.

# சுயதொழிலுக்கான உபகரணங்கள் பயனாளருக்கு வழங்கும் நிகழ்வு

மட்டக்களப்பு, ஏப்.09

சுயதொழிலுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

கைத்தொழில் வாணிப அமைச்சால் 20 லட்சம் ரூபா பெறுமதியான சுயதொழிலுக்கான ஒதுக்கீட்டு வேலைத் திட்டம் கடந்த 2017ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரனுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைவாக மட்டக்களப்பில் வறிய நிலையில் தலைமை தாங்கும் குடும்ப பெண்களில் சுயதொழிலுக்காக உதவி கோரியவர்களினது பெயர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களது விவரங்கள் கைத்தொழில் வாணிப அமைச்சின் மட்டக்களப்பு மாவட்ட காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டன.

இதனையடுத்து அவர்களுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சால் உரிய பயிற்சிகளும் வழங்கப்பட்டிருந்த நிலையில், முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்ட வாழைச்சேனை, கோறளைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட 26 குடும்பங்களுக்கு சுயதொழிலுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வு கோறளைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை உதவி பிரதேச செயலாளர் பிருந்தா நிரூபன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.



## மேல் கொத்மலையின் வான்கதவு நேற்று திறப்பு

கொழும்பு, ஏப். 09

மலையகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2 மணிமுதல் இரவு 10 மணிவரை பெய்த அடைமழை காரணமாக மேல் கொத்மலை மின்சார சபைக்கு நீரேந்தும் பகுதியில் ஆற்று நீரின் மட்டம் உயர்வடைந்துள்ளது.

இதனால் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவு ஒன்று நேற்று திறந்து விடப்பட்டுள்ளது.

அணைக்கட்டிற்கு கீழ் பகுதியில் ஆற்றை பயன்படுத்துபவர்கள் அவதானத்துடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு, நீண்டநாள் வறட்சியின் பின் நீரேந்தும் பிரதேசங்களுக்கு கன மழை பெய்ததனால் ஒரு சில நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் கணிசமான அளவு உயர்ந்துள்ளது.

இந்த மழை காரணமாக கெனியன், லக்ஷபான, விமல சுரேந்திர, மவுஸ்ஸாக்கலை ஆகிய நீர் தேக்கங்களின் நீர்மட்டம் ஓரளவு உயர்ந்துள்ளது என மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## கைத்தொழில்துறையில் நான்கு சதவீத வளர்ச்சி!

கொழும்பு, ஏப். 09

2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் கடந்த ஜனவரியில் கைத்தொழில்துறை வளர்ச்சி கண்டுள்ளது.

இந்த வளர்ச்சி நான்கு சதவீதத்தைத் தாண்டுவதாக குடிசன மதிப்பீட்டு புள்ளி விவரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கைத்தொழில் உற்பத்தி சுட்டெண் 104 புள்ளிகளை தாண்டியிருந்தது. இவ்வாண்டு இந்தச் சுட்டெண் 109 புள்ளிகளை எட்டியிருக்கிறது என திணைக்களத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பசுமை காலநிலை நிதிய பணிப்பாளர் ஜனாதிபதி மைத்திரியுடன் சந்திப்பு

கொழும்பு, ஏப். 09

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பசுமை காலநிலை நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹோவார்ட் பென்சே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தார்.

கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

பேண்தகு நில முகாமைத்துவம் தொடர்பில் மத்திய மலை நாட்டில் நீரின் ஓட்டம், நக்கிள்ஸ் மலைத்தொடர் மீதான காலநிலை மாற்ற தாக்கங்கள் குறித்து ஆராய்வதற்காக ஹோவார்ட் பென்சே உள்ளிட்ட உயர்மட்ட பிரதிநிதிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அது தொடர்பான விவரங்களை அவர் ஜனாதிபதிக்கு விளக்கினார்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் காலநிலை மாற்றத்திற்கு மத்தியிலும் மேற்கொண்டுவரும் செயற்பாடுகளுக்கு நிதி ஏற்பாடுகளை வழங்கும் பல்தரப்பு நிதியத்தை சேகரிப்பதற்காக செயற்பட்டு வரும் நிறுவனம் பசுமை காலநிலை நிதியம் ஆகும்.



பசுமை காலநிலை நிதியத்தால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் காபன் வாயு நுகர்வை குறைப்பதற்கும் காலநிலை மாற்றத்திற்கு மத்தியிலும் பரிமாற்றத்திற்குத் தேவையான உதவியையும் வழங்குகிறது.

மகாவலி அபிவிருத்தி சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அநுரதிஸாநாயக்கவும் இங்கு பிரசன்னமாகியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)





உலக சுகாதார தாபனத்தின் 70 ஆவது சுகாதார தின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இலங்கைக்கு வந்திருந்த உலக சுகாதார தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விசேட இராப்போசன விருந்து வழங்கப்பட்டது.

கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

# விசேட ரயில், பஸ் சேவைகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 09

புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் சொந்த ஊர் திரும்பும் பயணிகளின் நலன்கருதி, இலங்கை ரயில்வே திணைக்களம் விசேட ரயில் சேவைகளை முன்னெடுத்துள்ளது.

இதற்கமைவாக கொழும்பு கோட்டையிலிருந்து பண்டாரவளை வரை மற்றும் மாஹவ வரையிலும் மாஹவயில் இருந்து கொழும்பு கோட்டை வரை இரண்டு விசேட ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

நேற்று முன்தினம் இரவு 7.20 இற்கு கொழும்பு கோட்டையிலிருந்து பண்டாரவளை வரை நோக்கிச் சென்ற ரயிலில் குளிரூட்டப்பட்ட பெட்டிகளும் இணைக்கப்பட்டன.

எதிர்வரும் 16 ஆம் திகதி வரையில் இந்த மேலதிக ரயில் சேவை இடம்பெறும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, புத்தாண்டை முன்னிட்டு மேலதிகமாக இரண்டாயிரம் பஸ்களை சேவையில் ஈடுபடுத்தப் போவதாக இலங்கை போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

கொழும்பு, மத்திய பஸ் நிலையத்திலிருந்து நேற்று முதல் எதிர்வரும் 15



ஆம் திகதி வரை 24 மணிநேரமும் பஸ் சேவைகள் இடம்பெறும் என சபையின் தலைவர் ரமால் சிறிவர்த்தன தெரிவித்தார்.

எதிர்வரும் 16 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை பிற மாவட்டங்களில் இருந்து கொழும்பு நோக்கி மேலதிக பஸ் சேவைகள் நடத்தப்படும்.

பயணிகளுக்கு முறைப்பாடுகள் மற்றும் ஆலோசனைகளை சமர்ப்பிப்பதற்கு கொழும்பு மத்திய பஸ்தரிப்பு நிலையத்தில் விசேட பீடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக தொலைபேசியின் ஊடாகவும் பிரதான அலுவலகத்திற்கும் அறிவிக்க முடியும்.

இதற்கான தொலைபேசி இலக்கம் 0117 555 555 ஆகும். இதற்கு மேலதிகமாக பஸ்களில் காட்சிப்படுத்தப்படும் தொலைபேசி ஊடாகவும் பிரதேச அலுவலகங்களுக்கு முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும்.

இந்தக் காலப்பகுதியில் போக்குவரத்துச் சபையின் சாரதிகள், நடத்துநர்கள் அடங்கலாக சகல பணியாளர்களதும் விடுமுறை இரத்துச்செய்யப்பட்டுள்ளது என்றும் சிறிவர்த்தன குறிப்பிட்டார்.

பண்டிகைக் காலத்தில் பயணிகளின் நலன்கருதி தனியார் பஸ் உரிமையாளர்களும் மேலதிக பஸ் சேவைகளை நடத்துகின்றனர் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் தொடக்கம் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை மேலதிக சேவைகள் நடத்தப்படும். கொழும்பு பஸ்ரியன் மாவத்தை பஸ் நிலையத்தில் இருந்து மேற்கொள்ளப்படும் பஸ் சேவைகளின் எண்ணிக்கை 21 ஆயிரத்தில் இருந்து 35 ஆயிரம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது என ஆணைக்குழுவின் தலைவர் எம்.பி.ஏ. ஹேமசந்திர தெரிவித்தார்.

முதலீட்டு மேம்பாட்டு வலயங்களில் இருந்தும் தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் நடத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கரையோரப் பிரதேசங்களில் கடுமையான மழை பெய்யும்

கொழும்பு, ஏப். 09

நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு மழை எதிர்பார்க்கப்படுகிறது என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

குறிப்பாக, நாட்டின் கிழக்கு, தென்கிழக்கு மற்றும் தெற்கு ஆகிய பிரதேசங்களின் கரையோரப் பகுதிகளுக்கு கூடிய மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

காலி முதல் அம்பாந்தோட்டை வரையிலும், மட்டக்களப்பு ஊடாக திருகோணமலை வரையிலும் உள்ள கரையோரப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. ஏனைய கரையோரப் பகுதிகளிலும் மாலை வேளையிலும், இரவிலும் இடைக்கிடை மழை பெய்யும் சாத்தியக்கூறுகள் உள்ளன.

கரையோரப் பகுதிகளுக்கு பலமான காற்று வீசக் கூடும் எனவும், இதனால், அலையின் வேகமும் அதிகமாக இருக்கும் எனவும் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# பாடசாலையின் புதிய கட்டடம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 09

யாழ்ப்பாணம் சென்.பெனடிக்ற் றோமன் கத்தோலிக்க வித்தியாலய புதிய கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது

யாழ். ஆயர் யஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெறவுள்ள இவ்விழாவில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் பிரதமவிருந்தினராகவும்மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் கௌரவ விருந்தினராகவும், வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார் வடக்கு மாகாண கட்டடங்கள் திணைக்களப் பணிப்பாளர் மோகனதேவன், பொறியியலாளர் தே.சுரேஷ்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

# ஐ.தே. கட்சியின் மறுசீரமைப்புக்கு ஒரு மாதம் காத்திருக்க வேண்டும்!

கொழும்பு, ஏப். 09

ஐக்கிய தேசிய கட்சியின் உயர் நிலை பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை எதிர்வரும் ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படவுள்ளது என நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டம் நேற்றைய தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் நிலை பதவிகளில் மாற்றங்களை ஏற்படுத்தி புதியவர்களை பதவிகளில் அமர்த்துவது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள 09அமைச்சர்கள் மற்றும் 2 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவியில் எவ்வித மாற்றங்களையும் மேற்கொள்ளாதிருப்பதற்கான தீர்மானங்களுக்கு பெரும்பாலான ஆதரவு கிடைக்கப்பெற்றதாகவும் அஜித் மான்னப் பெரும குறிப்பிட்டிருந்தார். (கு)

## தினசரி ராசி பலன் (09.04.2018)

*2018 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் பங்குனித்திங்கள் 26 ஆம் நாள் திங்கட்கிழமை நவமித்திதி. பி.இ.4.34 மணி வரை. பின்னர் தசமி. நட்சத்திரம்: உத்தராடம் இரவு 8.38 மணி வரை. பின்னர் திருவோணம். மரணயோகம் இரவு 8.38 மணி வரை. பின்னர் சுபயோகம்.*

**ராகுகாலம்** - *காலை 07.36மணி முதல் 09.08 மணி வரை*

**சுபநேரம்** - *பகல் 12.03 மணி முதல் 01.33 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *பங்குனி மாத தேய்பிறை நவமி.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- *உத்தராடம்.*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்** சலனம் மிகுந்த நாள் பணம் தட்டுப்பாடாக இருக்கும். விரக்தி, ஏமாற்றம், பதற்றம் வந்து செல்லும். இனந்தெரியாத கவலை உண்டாகும். குடும்பப் பிரச்சினைகள் உண்டாகும்.

**ரிஷபம்** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் பலவிதமாகும். சிலருக்கு அயல்நாடு தொடர்புடைய நிறுவனத்தால் வேலை கிடைக்கும். புதுப் பொறுப்புக்களும், பதவிகளும் தேடிவரும்.

**மிதுனம்** கவலையான நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் சச்சரவுகள் உண்டாகும். அடுத்தடுத்து செலவுகளும், வேலைச்சுமைகளும் அதிகரிக்கும். பணம் கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**கடகம்** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கு அதிகமாகும். வியாபாரத்தில் மத்திம லாபம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள்.

**சிம்மம்** உயர்வான நாள். பொருளாதாம் உயர்வடையும். வியாபாரத்தில் தாமதமான ஒப்பந்தம் கையெழுத்தாகும். சகோதர உறவு பலப்படும். உத்தியோகத்தில் இவர்கள் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கன்னி** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். எதையும் திட்டமிட்டு செய்வார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முக்கியத்துவடம் தருவார்கள். திருமண காரியங்கள் கைகூடும்.

**துலாம்** சலனம் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் குழப்பநிலை உண்டாகும். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள். எதிலும் பொறுமைகள் கடைப்பிடிக்க வேண்டும்.

**விருச்சிகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் சரிசமமாக இருக்கும். எண்ணிய காரியங்களில் தடை, தாமதம் உண்டாகும். வியாபாரத்தில் ஏற்றமும், இறக்கமுமாக இருக்கும்.

**தனுசு** அனுகூலமான நாள். பணம் சரளமாகப் புழங்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வெகுநாளாக வீடு வாங்கும் கனவு நிறைவேறும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**மகரம்** அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். நீண்டநாள் ஆசைகள் நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பணவரவு சுமாராக இருக்கும்.

**கும்பம்** அலைச்சல் மிகுந்த நாள். படித்து முடிந்தவர்கள் திறமைக்குத் தகுந்த வேலைதேடித் திரிவார்கள். சிலர் கொடுத்த பணத்தை மீளப்பெறுவதற்கு அலைந்து திரிவார்கள்.

**மீனம்** மேன்மையான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழிலில் இவர்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புக்கள் வரும்.

**சந்திராட்டம நாள்: மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம், 2ஆம், 3 ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

## இறால் இறக்குமதி குறித்து இன்றைய தினம் எதிர்ப்பு போராட்டம்

கொழும்பு, ஏப். 09

நோய் தொற்று கொண்ட இறால் வகையை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.



இன்று வானூர்தி தளத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று இலங்கை மீன் வளர்ப்பு சங்கத்தினரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

தனியார் நிறுவனம் ஒன்றினால் இலங்கைக்கு இறால் வகை இறக்குமதி செய்யப்படவுள்ளதாக அந்த அமைப்பு குற்றம் சுமத்திய நிலையில், மீன்வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையால் இதற்கான அனுமதியும் வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

## புதுவருடத்தையொட்டி இரவிலும் சலூன்களை திறக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.09

சித்திரைப்புத்தாண்டுக்காக யாழ்ப்பாண மாவட்ட சிகை ஒப்பனை நிறுவனங்களுக்கு 6 நாள்கள் இரவு நேர வரையறை தளர்த்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு இன்று தொடக்கம் 13 ஆம் திகதி வரை இந்த நேரக்கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 14 ஆம் திகதியிலிருந்து வழமையான நேரக்கட்டுப்பாடு அமுலில் இருக்கும்.

இதனை மீறி நடப்பவர்களுக்கு ஒன்றிய யாப்புக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப் படும் என யாழ்ப்பாண மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் ஆ.உதயசங்கர் தெரிவித்துள்ளார்.

## முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டி

கிளிநொச்சி, ஏப்.09

கரைச்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள செல்வாநகர் முதியோர்களுக்கான மாபெரும் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு முதியோர் சங்கப் ஆலோசகர் மு.சிவபாலன் தலைமையில் செல்வாநகர் செந்தணல் விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் முதியோர் களுக்கான சைக்கிள் ஓட்டம், வேகநடை, பலூன் உடைத்தல், கிடுகு பின்னுதல், ஊசி கோத்தல், யானைக் குக் கண் வைத்தல், கரண்டியில் தேசிக்காய் கொண்டு செல்லுதல், போத்தலில் தண்ணீர் நிரப்புதல், பழமொழியைப் பூர்த்தி செய்தல், பெயர் எழுதுதல், கார், பஸ் விளையாட்டு, வாளியில் பந்து போடுதல், சங்கீதக் கதிரை, அரிசியில் நெல் பொறுக்குதல், படம் பார்த்து பெயர் சொல்வது, முடிச்சு அவிழ்த் தல், பாட்டுப்பாடல், ஓரங்க நாடகம் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன. (இ

## தரைத்தோற்ற மாற்றத்துடன் இலங்கையின் புதிய வரைபடம் மே மாதத்தில்

கொழும்பு, ஏப். 09

இலங்கையின் புதிய வரைபடத்தை எதிர்வரும் மே மாதம் வெளியிடுவதற்கு நில அளவைகள் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இந்த வரைபடத்தைத் தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என திணைக்களத்தின் தலைவர் பீ.என்.பீ. உதயகந்த தெரிவித்துள்ளார்.

இறுதியாக வெளிவந்த படத்தின் பின்னர் தரைத் தோற்றத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்கள் புதிய வரைபடத்தில் வெளிவரவுள்ளன என்றும் திணைக்களத்தின் தலைவர் குறிப்பிட் டுள்ளார்.

## ஆலய உற்சவம்

சித்தன்கேணி, ஏப்.09

சித்தன்கேணி ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த பங்குனித்திங்கள் அஷ்டோத்திர சதா சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் அகில இலங்கை சைவப் புலவர் சங்கச் செயலர் செ.கந்த சத்தியதாசன் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

* * *

அச்சுவேலி, வடக்கு (சரசாலி) ஸ்ரீ சித்திர வேலாயுதர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

ஆலய பிரதம குரு இ.நித்திய கஜேந்திரன் ஐயர் தலைமையில் இடம்பெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும் 28 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று 30 ஆம் திகதி திங்கட்கிழமை பூங்காவனத் திருவிழா, திருக்கல்யாணம் என்பன இடம்பெறவுள்ளன. (இ

## மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்புவேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

வவுனியா பிரதேசத்தில் - மணிபுரம் பிரதேசம் மணிபுரம் வீட்டுத்திட்டம் சுந்தரபுரம் வீட்டுத்திட்டம் சுந்தரபுரம் பிரதேசம் வரன் அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் -

மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## மனித உரிமை செயற்பாடுகளுக்கு கடும் எதிர்ப்பு:

# ரஷ்யா, சீனாவின் போக்குக் காரணமாக ஐ.நா. தடுமாற்றம்

வழிமூலம் - The guardian
ஆங்கிலத்தில் - Julian Borger
**மொழியாக்கம் - நித்தியபாரதி**

அனைத்துலக நாடுகளில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஐக்கிய நாடுகள் சபையால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளை பல வீனப்படுத்தும் நடவடிக்கைகளை சீனா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றன என்று இராஜதந்திரிகள் மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர்.

சீனா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் இணைந்து மனித உரிமைகள் கண்காணிப்பாளர்களுக்கான நிதி வழங்கலைத் தடுப்பதற்காக 5 ஆவது ஆணைக் குழு எனக் கூறப்படும் ஐ.நா. சபையின் வரவு-செலவுத் திட்டக் குழுவைப் பயன்படுத்தியுள்ளன.

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான உயர் அதிகாரிக்கான நிதியை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளையும் இவ்விரு நாடுகளும் மேற்கொண்டுள்ளன.

2009 இல் சிறிலங்காவில் இடம்பெற்ற மிக மோசமான படுகொலைகள் இடம்பெறாமல் தடுப்பதில் அல்லது இது தொடர்பாக சிறிலங்காவுக்கு ஐ.நா. எச்சரிக்கை விடுக்கத் தவறியதைத் தொடர்ந்து 2014 இல் ஐ.நா. மனித உரிமைகள் முன்னணி ஆரம்பிக்கப்பட்டது.

மனித உரிமைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தால் உயர் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆனால் சீனா மற்றும் ரஷ்யாவின் எதிர்ப்பைத் தொடர்ந்து இவ் வாண்டு ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான உயர் பதவி நிலைக்கான நிதியை ஐ.நாவின் ஐந்தாவது ஆணைக்குழு நிறுத்தியுள்ளது.

ஜெனீவாவிலுள்ள மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் அலுவலகத்திற்கான நிதியும் நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்டு தான் தனது பதவியிலிருந்து விலகப்போவதாகவும் தொடர்ந்தும் இதில் பதவி வகிக்க விரும்பவில்லை எனவும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அனைத்துலக சமூகத்தின் ஆதரவானது குறைவாக உள்ளதால், இது தனது பணியைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு தடையாக உள்ளது எனவும் மனித உரிமைகளுக்கான தற்போதைய உயர் ஆணையாளர் செயிட் ராட் ஹுசேன் தனது பணியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சிரியாவில் வாழும் பொது மக்களின் அவலநிலை தொடர்பாக செயிட் உரையாற்றியிருந்தார். இவர் தனதுஉரையின் ஆரம்பத்தில், பாதுகாப்புச் சபையானது மனித உரிமைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்குப் பொருத்தமான தளம் அல்ல என்பதால் இங்குதான் உரையாற்றுகின்றமையைத் தடுப்பதற்காக ரஷ்யாவால் வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டது என செயிட் தெரிவித்திருந்தார்.

'ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்தாவது ஆணைக்குழு மனித உரிமைகள் தொடர்பாக விவாதிப்பதற்கான ஒரு களமாக மாறியுள்ளது' என மனித உரிமைகள் கண்காணிப்பகத்திற்கான ஐ.நா. இயக்குநர் லூயிஸ் சார்பொன்னியு தெரிவித்தார். 'சீனா, ரஷ்யா போன்ற நாடுகள், மனித உரிமைகள் என்கின்ற பெயர்களைக் கொண்ட அமைப்புக்களுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளன' என லூயிஸ் சார்பொன்னியு குறிப்பிட்டார்.



'பாதுகாப்புச் சபையில் மனித உரிமைச்செயற்பாடுகளுக்கான ஆணையை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் அதன் பின்னர் ரஷ்யா மற்றும் சீனா இதற்கான நிதியை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

மனித உரிமைகளுக்கு பேச்சளவில் மட்டும் ஆதரவளிக்கும் நாடுகள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க மாட்டார்கள். ஆகவே ரஸ்யா மற்றும் சீனா போன்ற நாடுகள் வெற்றி பெறுவதற்கு நாம் அனுமதிக்கப் போகின்றோமா?' என சார்பொன்னியு கேள்வி எழுப்பினார்.

'சீனா தற்போது ஐ.நாவில் உண்மையான அரசியல் இயங்குவிசையைக் கொண்டுள்ளது. அமெரிக்காவிற்கு அடுத்ததாக ஐக்கிய நாடுகள் சபைக்கு அதிகளவான நிதிப்பங்களிப்பை மேற்கொள்ளும் இரண்டாவது நாடாக சீனா விளங்குகிறது. ஐ.நா. மனித உரிமைச் செயற்பாடுகளுக்கான தனது ஆதரவை சீனா குறைத்து வருகிறது.

சீனா, ஐ.நா. அமைப்புக்களில் தனிப்பட்ட உரிமைகளை விட 'அமைதியை' அதிகம் வலியுறுத்தி வருகிறது. பெரும்பாலான நாடுகள் தாம் கேட்பதையே அதிகம் விரும்புகின்றன' என வெளியுறவுக் கோட்பாடுகளுக்கான ஐரோப்பிய சபைக்கான ஐ.நா வல்லுநர் ஒருவர் தெரிவித்தார்.

சீனாவால் மனித உரிமைச் செயற்பாடுகளுக்கு எதிராக பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்புக்கள் காண்பிக்கப்படுவதால் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் செயற்பாடுகள் வலுவற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றன என மேற்குலக இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையில் தனது நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவாக வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக சீனாவால் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெரியளவில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது ஐ.நாவில் சீனாவுக்கு மேலும் பலத்தைச் சேர்த்துள்ளது.

'ஐ.நாவின் ஐந்தாவது ஆணைக்குழு மிக முக்கிய விவாதக் களமாக உள்ளது. எமது குழுவினர் மனித உரிமை விடயங்களை முன்வைப்பதற்கு மிகவும் போராடுகின்றனர். வரிவழங்குநருக்கு சிறந்த பெறுமதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம்.

ஆனால், அதேவேளையில் ஐக்கிய நாடுகள் சபையில் மனித உரிமைச் செயற்பாடுகள் மிகவும் முக்கியமானவையாகவும் மையப்புள்ளியாகவும் உள்ள மையால் இதற்கான நிதியைக் குறைக்கக் கூடாது என்பது முக்கியமானதாகும்' என இராஜதந்திரி மேலும் குறிப்பிட்டார்.

> **"மனித உரிமைச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தால் உயர் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆனால் சீனா மற்றும் ரஷ்யாவின் எதிர்ப்பைத் தொடர்ந்து இவ் வாண்டு ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தில் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான உயர் பதவி நிலைக்கான நிதியை ஐ.நாவின் ஐந்தாவது ஆணைக் குழு நிறுத்தியுள்ளது."**



---

# ஓ.எல்லில் 51 வீதமானோர் ஆங்கில பாடத்தில் சித்தி!

கொழும்பு, ஏப் 09

*2017ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் 51.12 சதவீதப் பரீட்சார்த்திகள் சித்திபெற்றுள்ளனர் என அரச தகவல் திணைக்களம் செய்தி வெளியிட்டுள்ளது.*

*2017ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரதப் பரீட்சையில் 2 இலட்சத்து 96 ஆயிரத்து 157 மாணவர்கள் ஆங்கில பாடத்தில் பரீட்சை எழுதினர்.*

*அவர்களில் 31 ஆயிரத்து 619 பேர் ஏ சித்தியையும் 19 ஆயிரத்து 822 மாணவர்கள் பி சித்தியையும் 39 ஆயிரத்து 717 பேர் சி சித்தியையும் ஒரு லட்சத்து 51 ஆயிரத்து 393 மாணவர்கள் எஸ் சித்தியைப் பெற்றுள்ளனர்.*

*ஏனைய பாடங்களுடன் ஒப்பிடுகையில் இது குறைந்த மட்ட சித்தியாகும். எனினும் 2016ஆம் ஆண்டு பரீட்சையில் 47 சதவீத மாணவர்களே ஆங்கில பாடத்தில் சித்தி பெற்றிருந்தனர் என்று அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ஐ)*

---

# ஐ.தே.க. மறுசீரமைப்பை ஆராய தலைமைக் குழு

கொழும்பு, ஏப் 09

ஐக்கிய தேசியக் கட்சியின் பதவி நிலைகளை மறுசீரமைப்பு தொடர்பில் அலசி ஆராயக் கட்சியின் செயற்குழுவால் தலைமைத்துவக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் பதவி நிலைகளை மறுசீரமைப்பது தொடர்பில் அந்தக் கட்சியின் செயற்குழு நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது கட்சியின் தலைமைப் பதவியை மாற்றச் செயற்குழு உறுப்பினர்களில் பெரும்பாலோனோர் விரும்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கட்சியின் மறுசீரமைப்புத் தொடர்பில் தீர்க்கமான தீர்வைக் காண 12 பேர் கொண்ட தலைமைத்துவக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் தெரிவித்தனர்.

ரணில் விக்கிரமசிங்கவின் மருமகன் ருவான் விஜயவர்த்தன, ஹரீன் பெர்னாண்டோ, அகிலவிராஜ் காரியவசம், ரஞ்சித் மத்தும பண்டார, நவீன் திசாநாயக்க, நளின் பண்டார, மங்கள சமரவீர, அஜித் பி பேரேரா, இரான் விஜயவர்த்தன, சஜித் பிரேமதாஸ, ரவி கருணாநாயக்க மற்றும் அலவத்துலவ ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)



# மட்டுவில் – பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய
# பங்குனித் திங்கள் பொங்கல் சிறப்பிதழ் – 09.04.2018



## பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி

தொன்மைச்சிறப்பு மிக்க மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு வெளிவரும் இம் மலரிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதனை இட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஈழத்தில் வரலாற்றுப்பிரசித்தி பெற்ற அம்பாள் ஆலயங்களின் வரிசையில் தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள மட்டுவில் பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்பாள் ஆலயத்திற்கு தனித்துவமான இடம் உண்டு. இவ் ஆலயத்தில் இடம்பெறுகின்ற வருடாந்த உற்சவங்களில் பங்குனித்திங்கள் உற்சவமானது மகத்துவம் வாய்ந்ததாகும். இவ் உற்சவ காலத்தில் நாட்டின் பல பாகங்களில் இருந்து அடியவர்கள வருகைதந்து ஆலய தீர்த்தக்கேணியில் நீராடி அம்பாளுக்கு பொங்கல் பொங்கி மடைபரவி வழிபாடு செய்வதும் பறவைக்காவடி, காவடி, கரகம், தீச்சட்டி, பாற்செம்பு முதலானவற்றை எடுத்து நேர்த்திக்கடன் செலுத்துவதும் வழமையானதாகும். இவ்வருடமும் அம்பாளுக்கு வெகு விமரிசையாக விழா நடைபெற்று அனைவரும் அம்பாளுடைய திருவருளைப்பெற்று கொள்ள வேண்டி நிற்பதோடு வறுமை நீங்கி வளம் பெருகி கலைப்பண்பாடு மரபுகள் மிளிர மக்களின் வாழ்க்கை முன்னேற்றம் காண எல்லாம் வல்ல அம்பாளின் திருவருளை வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**திருமதி தேவந்தினி பாபு**
**பிரதேச செயலர்,**
**பிரதேச செயலகம்,**
**தென்மராட்சி,**

## வர்த்தக சங்கத் தலைவரின் வாழ்த்து

ஈழத்திருநாட்டின் மணிமகுடமாய் விளங்கும் யாழ்.குடாநாட்டின் முத்தாக தென்மராட்சி விளங்குகின்றது. முல்லையொடு நெய்தல் கொஞ்சி விளையாடும் சிறப்பு மிக்க தென்மராட்சி, இங்கு முக்கனி விருட்சமாக மா, பலா, வாழை செழிப்புற்று விளங்குகின்றன. தென்சோலை மலிந்த மண் நம் மண் அருள்மிகு மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் பழமையும் புதுமையும் மிக்க திருத்தல்களில் ஒன்றாகும்.

வந்தோரை வரவேற்கும் விருந்தோம்பல் பண்புள்ள மண் நம் தென்மராட்சி மண்ணே. எமக்கும் எம் மண்ணுக்கும் பெருமை சேர்ப்பது மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம், இச்சிறப்பு மலர் பயன் மிக்கதாக விளங்க வேண்டும் என்று அம்பாளின் பாத கமலங்கைளை வணங்கி வாழ்த்துக் கூறுகின்றேன்.

**ந.சிவபாலன்**
**வர்த்தக சங்கத் தலைவர்,**
**அம்பிகா மருந்தகம், சாவகச்சேரி.**

## பங்குனித்திங்களும் பன்றித்தலைச்சி அம்மனும்

ஈழவளநாட்டிலே சைவமணம் கமழும் தென்மராட்சிப் பதியிலே வட திசை நோக்கிப்பக்தர்களுக்கு அருளாட்சி வழங்கிய வண்ணம் அருள் பாலித்துக்கொண்டிருப்பவள் பன்றித் தலைச்சி அம்பாள் ஆவாள்.

இவ்வாலயம் கி.பி. 1750 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து கிட்டத்தட்ட முந்நூறு ஆண்டுகள் வரலாற்றுப் பெருமை வாய்ந்த திருக்கோவிலாகப் போற்றப்படுகிறது. ஆரம்பகாலத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட இவ்வாலயம் தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கற்றளி ஆலயமாகக் காட்சியளிக்கிறது

இவ்வாலயத்தில் உக்காலம் 6.00 மணி, காலைசந்தி 9.00மணி, உச்சிக்காலம் 12.00மணி, சாயரட்டை பூசை, 2 – ஆம் காலம் 5.00 – 6.00 மணி அர்த்தசாமம் 6.00 – 7.00 மணிக்கும் காலப்புசை நித்தியபுசையாக நடைபெறுகிறது. விசேடமாக திங்கட்கிழமைகளில் காலைசந்திப்புசை 10 மணிக்கும், உச்சிகாலப்பூசை 2 மணிக்கும் நடைபெற்று வருகிறது. பன்னிரு மாதங்களில் பங்குனி மாதம் பிறந்ததும் ஈழமண்மக்கள் உள்ளத்தில் அருளாட்சி வழங்கும் தெய்வமாக அன்னை அம்பாளே விளங்குகிறாள். அன்னைக்கு அடியார்கள் விரதமிருந்தும் ஆசாரசீலர்களாக ஒழுகியும் வழிபடுகின்றனர்.

அதிகாலை துயிலெழுந்து நீராடியும் ஆலய தீர்த்தக்கேணியில் நீராடியும் ஐந்து மணிப்புசை கண்ணாரத் தரிசிப்பதற்கு நாற்றிசையிலிருந்தும் வருகை தந்து வழிபடுகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். அம்பாள் நாமஅர்ச்சனையும் கற்புரதீப ஒளயும், அடியார்களின் "அரோகரா" ஓசையும் உள்ளத்தில் பக்தி உணர்வை ஆலய சூழலுக்கு நுழையும் போதே வேறெந்த எண்ணமும் இன்றி அன்னை எம்மை அழைப்பது போல ஈர்த்துச் செல்கிறாள்.



இத்தகைய ஓர் அற்புத உணர்வினை பங்குனித்திங்களிலேயே உணரமுடிகிறது. அம்மனைத் தரிசிக்க வருகின்ற பக்தகோடிகள் தீர்த்தக்கேணியில் நீரெடுத்து ஆலயத்தின் நாற்புறமும் பொங்கிப்படைத்து வழிபடுவதோடு அடியார்களுக்கும் அமுதூட்டுகின்றனர். அத்துடன் அன்னதானம், நீர்க்கஞ்சி, மோதகம், வடை போன்ற பலபடையல்கள் படைத்தும் அம்மன் அருளை வேண்டி வழிபடுகின்றனர்.

ஆலயமுன்றலில் மட்டுமன்றி மட்டுவில் பிரதேசம் அனைத்திலும் தாகசாந்தி நிலையங்கள் அமைத்து அடியார்களின் களைப்பைப்போக்கி அன்னை அருளை வேண்டி நிற்கின்றனர். பக்தர்கள் அன்னை வழிபாட்டின் மூலம் தமது நேர்த்திகளை மேற்கொள்ளுகின்றனர். இவற்றில் பறவைக்காவடி, செதில்காவடி, தூக்குக்காவடி, எடுத்து அடியார்கள் புடைசூழக் கால்நடையாக அம்பாளை நோக்கிச் செல்கின்றவேளை மேளவாத்தியங்கள் முழங்க வீதியால் செல்லும் வாகனங்கள் ஓரமாக நின்று வழிபடும்காட்சிஉள்ளத்தைஉருக்குகிறது. அடியவர்களின் சூரியதேவனின் வெப்பத்தைக் தணிக்க சந்திக்கு சந்தி நின்று நீர் ஊற்றி வழிபடுகின்ற இறை தொண்டர்களைக் காண்கிறோம்.

பங்குனி கால இரவு உற்சவம் வர்ண ஒளயில் இறைவியின் காட்சியைத் தரிசிப்பதற்கு இரவு நேரத்தையும் தவப்பொழுதாக மதித்து வேண்டிநிற்பர். அம்பாளின் நாதஸ்வரஓசையும் மேளமும் முழங்க அன்னையின்பின் பஜனைப் பாடல்கள் பாடுவது மேலும் பக்தியை வலுவடையச் செய்கின்றது. பங்குனிமாத வெம்மையில் ஏற்படும் கொடுநோய்களைத் குணப்படுத்தும் குணவதியாக பன்றித்தலைச்சி அம்மையே விளங்குகிறாள். அம்மனைத் தொழுதால் அம்மைநோய்கள் விரண்டோடும்.

வருடா வருடம் பங்குனித்திங் கள் நாட்களில் ஆலயச்சூழலில் பல்வேறுபட்ட நிறுவனங்கள் அடியவர்களின்பாது காப்பைப் பேணுகின்றார்கள் இந்து இளைஞர்மன்றத்தினர் சாரணங்கள், முதலுதவிச் சங்கத்தினர், சுகாதாரத் துறையினர், பிரதேச செயலகஉத்தியோகத்தர்கள், செஞ்சிலுவைச்சங்கத்தினர் பிரதேச சபையினர் ஆகியோர் இணைந்து சேவையாற்றுகின்றனர். அன்றையதினம் முழுவதும் அன்னையின் அருட்கீதங்களும், அன்னையின் சிறப்புக்களில் மகிமைபற்றிய பிரச்சங்கங்களும் ஒலி பெருக் கியில் ஒலித்துக்கொண்டிருப்பது அடியவர்களின் உள்ளத்தை பக்தி வெள்ளத்தில் ஆழ்த்துகின்றது.

ஆலயத்திற்கு அர்ச்சனை செய்வதற்கு கிரியைகளை நடத்துவதற்கும் அந்தணச்சிவாச்சாரியார்கள் முழுமையாக ஒன்றித்து இறை கடமையில ஈடுபடுகிறார்கள். சிவாச்சாரியர்களுக்கு உதவியாக அம்மையின் தொண்டடியார்கள் சுறுசுறுப்பாக அருட்பணி புரிகிறார்கள். ஆலயத்தின் வளர்ச்சிக்காக முற்றுமுழுதாக தம்மை அர்ப்பணித்து ஆலய தர்மகர்த்தாவும், அவர்சார்ந்த தொண்டர்களும் நேரகாலம் பாராது இறைசிந்தனையோடும் பக்தியும், முத்தியும் அம்மன் அடியவர்கள் பெற வழிகாட்டுகிறார்கள்.

அன்னையின் ஆலய தரிசனம் முடித்து சிறுவர்முதல் பெரியோர்வரை தமது புறத்தேவைகளை நிவர்த்தி செய்ய கடைகளும், கடைத்தொகுதிகளும் மற்றுமொரு சூழலை அணிசெய்கின்றது. செங்கதிரோன் வருகையால் நெல் முற்றி அறுவடைசெய்த உழவர்கள் வீட்டில் நெல்மூடைகளை அடுக்கி ஒரு பகுதி அரிசியாக்கி பன்றித்தலைச்சி அம்மனுக்கு பொங்கிப்படைக்கும் காலை உழவன் உற்பத்தி செய்த முட்டிக்கத்தரிக்காய்க்கு முட்டி மோதும் அடியவர்களைப் பார்க்கும்போது பக்தி மேலெழுகின்றது. படையல்களுடன் கத்தரிக்குழம்பு பிசைந்து சாதகம் உண்ணும்போது மகிழ்ச்சிப் பிரவாகம் எழுகின்றது.

"அன்னையைத் தொழுதால் அதிகவரம் பெறலாம்" என்ற நம்பிக்கை பங்குனித் திங்களில் பன்றித்தலைச்சி அம்மன் தருவாள்.

**அ. மனோரஞ்சிதன்**
**ஆசிரிய ஆலோசக அலுவலர்,**
**தென்மராட்சி கல்வி வலயம்.**

## அன்னை அருள்

ஈழத்திருநாட்டின் மணிமகுடமாய் விளங்கும் யாழ் குடாநாட்டின் முத்தாக தென்மராட்சி விளங்குகின்றது. முல்லையொடு நெய்தல் கொஞ்சி விளையாடும் சிறப்பு மிக்கது. மட்டுவிலில் முக்கனிகள் விருட்சம் மா, பலா, வாழை செழிப்புற்று விளங்குகின்றது. தென்னஞ்சோலை மலிந்த மண். அருள்மிகு மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் வீற்றிருக்கும் ஊர் கத்தரிக்காய்க்கு பேர் பெற்ற இடம் இவ்வூரில் பங்குனி பிறந்தாலே ஊர் கூடி அம்மனுக்கு பொங்கல், காவடி, கரகம், பால்செம்பு போன்ற நேர்த்திக்கடன் செய்வதற்கு தயராகிவிடுவார்கள்.

பங்குனித்திங்களில் பக்தர்கள் வைகறை பொழுதில் வந்த வண்ணமிருப்பர். வருபவர்கள் எல்லாம் பொங்கலுக்கு வேண்டிய பொருட்களுடன் வந்து பொங்கி கத்தரிக்காய்கறியும் வைத்து படைத்து தாமும் உண்டு அடியார்களுக்கும் வழங்கி அருள்பெற்றுச்செல்வது வழமை அம்பாளின் தீர்த்தத்தில் ஒருவாளி தீர்த்தமாவது தலையில் ஊற்றாத பக்தர்களே இல்லை என்றே கூறலாம் அம்மாளாச்சி தீர்த்தமாகவும் அன்ன ஆகாரமாகவும் நின்று அனைத்து உயிர்களையும் காக்கும் சக்தியாக விளங்குகின்றாள்.

"சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் புங்கொடியே நின் புது மலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமோ"

என்ற அபிராமி அந்தாதியின் பொருளுக்கிணங்க அம்பாளை மெய்யன்போடு புசிப்பவர்களுக்கு சகல செல்வங்களும் தந்து அருள்பாலிப்பவள். எங்கள் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் எனவே அம்பாளை வணங்கி அருள்பெற்று ஏகுவோம். அம்பாளின் பங்குனித்திங்கள் பொங்கல் உற்சவ சிறப்பு மலராகவெளவரும் காலைக்கதிர் பத்திரிகைக்கு செய்தி வழங்கி அவர்களுக்கும் அம்பாளின் நல்அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

"அன்னையே உன் பொற்றிருமுகத்தை
உள்ளும் புறமுங்கண் டன்புற்றிருக்க அருள்."
"அன்னை அளித்திட்ட உடல் அன்னை அளித்த உயிர்
அன்னை அருட் பணிக்கே யாம்"

நன்றி

அன்னையின் தொண்டன்
கா. சிவஞானசுந்தரம்
திருக்கணித பதிப்பகம்
சாவகச்சேரி.

இன்றைய பங்குனித் திங்கள் உற்சவ நன்நாளில் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் அருள் எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

ரூபி ஜுவல்லறி
இல. 227, 2290 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தாமோதரம்பிள்ளை அன் சன்ஸ்
இல. 135, கண்டி வீதி சாவகச்சேரி

சீதா ஜுவல்லறி
இல. 01, நவீன சந்தை, சாவகச்சேரி.

சண்முகம் அன் சன்ஸ்
கண்டி வீதி, சாவகச்சேரி.

பரம்ஸ் மோட்டோர்ஸ்
இல. 113, கண்டி வீதி, சாவகச்சேரி.

அம்பிகா மருந்துச்சாலை
கண்டி வீதி, சாவகச்சேரி.

இந்திரன் ஜுவல்லர்ஸ்
இல – 10, நவீனசந்தை, சாவகச்சேரி.

FASHION INDIA
NO.05,06,13 NEW MARKET, CHAVAKACHERI.

லக்ஷி ஆபரண மாளிகை
இல.12 நவீன சந்தை, சாவகச்சேரி.

ஸ்ரார் ஹோட்டல்
இல. 245, கண்டி வீதி, சாவகச்சேரி.

சண் ரெக்ஸ்
இல.08, நவீன சந்தை உட்புறம், சாவகச்சேரி.

வீ.எம்.கே ஜுவல்லறி
இல. 80/3 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2515
கண்டி வீதி, சாவகச்சேரி. 021 227 1616

ஈசன் களஞ்சியம்
யூஸ் வகைகள், குடிதண்ணீர் போத்தல்களின் ஏக விநியோகஸ்தர்கள்
கண்டி வீதி, சாவகச்சேரி.

நியூ பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
கால் நடைத் தீவனம் மற்றும் இரசாயன விற்பனையாளர்
இல. 121, கண்டி வீதி, சாவகச்சேரி

நிலா ரெக்ஸ்
இல. 20, நவீன சந்தை உட்புறம், சாவகச்சேரி.

# தாய்லாந்துக் கடற்படைக் கப்பல்கள் இன்று நாட்டுக்குத் திரும்புகின்றன

கொழும்பு, ஏப். 09

இலங்கை வருகைதந்துள்ள தாய்லாந்து அரச கடற்படைக்குச் சொந்தமான மூன்று (HTMS Bangpakong, Makutraja kumarn and Pattani ) இராணுவ பயிற்சிக் கப்பல்கள் இன்று நாட்டை விட்டு புறப்பட்டுச் செல்லவுள்ளன.

இந்தக் கப்பல்கள் கொழும்புத்துறை முகத்தை கடந்த வெள்ளிக்கிழமை வந்தடைந்தன. நல்லெண்ண அடிப்படையில் இங்கு வந்துள்ள இந்தக் கப்பல்களை கடற்படை மரபுகளுக்கு அமைவாக இலங்கை கடற்படையினர் வரவேற்றனர்.

இந்தக் கப்பலின் கடற்படை பயிற்சி மாணவர்கள் பிரிவின் கட்டளைத் தளபதியும், கப்பலின் அதிகாரியும் மேற்கு பிரிவு கடற்படை தலைமையகத்தின் நிறைவேற்றுக் கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் நிசாந்த உலுகேதென்னவைச் சந்தித்தார். இவர்களிடையில் நட்புறவுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து இந்த அதிகாரிகள் கடற்படையின் தலைமையகத்தில் கடற்படை அதிகாரிகளின் தலைமை அதிகாரி ரியல் அட்மிரல் நீல் ரொசைரோவை சந்தித்தனர். இதன்போது இரு தரப்புக்கும் முக்கியமான பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

இந்த கப்பல்கள் இங்கிருக்கும் காலப் பகுதியில் கப்பல்களின் பணியாளர்கள் இலங்கை கடற்படையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டி மற்றும் கலாசார நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருந்தனர்.



## றுஹுணு, வயம்ப பல்கலைகளில் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி



கொழும்பு, ஏப். 09

றுஹுணு மற்றும் வயம்ப பல்கலைக்கழகங்களில் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

393 கோடி ரூபா இதற்கென மதிப்பீடு செய்யப்படவுள்ளது.

றுஹுணு பல்கலைக்கழகத்தின் வைத்தியபீடத்திற்காக கட்டடத் தொகுதி ஒன்றும், பொறியியல் பீடத்தில் நவீன கல்வி கேந்திர கட்டடம் ஒன்றும், வடமேல் மாகாண பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப கட்டடத் தொகுதி ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

அரச பல்கலைக்கழகங்களில் நிலவும் இடப்பற்றாக்குறை மற்றும் வசதிகளை மேம்படுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி இதற்காகப் பயன்படுத்தப்படவுள்ளது.

(க)

## நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசுக்கு 2 ஆவது வாய்ப்பு

கொழும்பு, ஏப். 09

நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியடைந்ததன் பின்னர் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் அரசுக்கு தற்போது இரண்டாவது வாய்ப்புக் கிடைத்துள்ளது என தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட சர்வமத பேரவை உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல் செயலமர்வில் கலந்து கொண்டு அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

2015 ஆம் ஆண்டு குறிப் பிட்ட ஒரு சில பணிகளை நிறைவேற்றுவதற்காகத்தான் இந்த நல்லாட்சி அரசு ஆட்சி பீடமேறியது.

ஆனால், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் அந்தப் பணிகள் மிகவும் மந்தகதியிலேயே இடம்பெற்று வந்துள்ளமையோடு அரசாங்கம் பின்வாங்கும் நிலையும் காணப்பட்டது.

அதற்கான காரணம் நல்லாட்சி அரசுக்குள்ளே காணப்பட்ட பிளவாகும். நல்லாட்சியிலுள்ள இரண்டு கட்சிகளுக்கு இடையிலும் பிளவு காணப்படுகின்ற அதேவேளை, தற்போது மக்களுக்கு மத்தியிலும் பிளவு காணப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.





வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி அ.யதினிகா 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தமையைப் பாராட்டி வட்டு. மூளாய் வீதி ஐக்கிய நாணய சங்கத்தினர் கௌரவித்த போது... (இ)



வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். கனகரட்ணம் விந்தன் தனது 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் தூர தேசத்தில் இருந்து கால்நடையாக பாடசாலை செல்லும் யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டைச் சேர்ந்த மாணவன் ஒருவருக்கு ரூபா 14 ஆயிரம் பெறுமதியான சைக்கிள் ஒன்றை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் வைத்து கல்லூரியின் அதிபர் அருட் பணி திருமகன் முன்னிலையில் வழங்குகின்றமையை இங்கு காணலாம்.





யாழ்ப்பாணம், நீராவியடி சைவபரிபாலன சபையின் மண்டபத்தில் நேற்றுக் காலை 9 மணி முதல் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

நீராவியடி (ஜே/101) கிராம சேவையாளர் பிரிவின் கிராம அபிவிருத்திச் சங்கமும் சிவில் நிர்வாகக் குழுவும் இணைந்து இந்தக் குருதிக் கொடை நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. இதில் கலந்து கொண்டு பலர் குருதி தானம் செய்த வேளையில்...!

(இ)

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 25 விடைகள் (பகுதி I)

| | | | |
|---|---|---|---|
| 1) 3 | 11) 1 | 21) 1 | 31) 1 |
| 2) 1 | 12) 2 | 22) 1 | 32) 2 |
| 3) 2 | 13) 1 | 23) 2 | 33) 1 |
| 4) 3 | 14) 2 | 24) 3 | 34) 3 |
| 5) 1 | 15) 3 | 25) 3 | 35) 1 |
| 6) 16 | 16) 2 | 26) 3 | 36) 3 |
| 7) 4 | 17) 2 | 27) 1 | 37) 1 |
| 8) 1 | 18) 3 | 28) 2 | 38) 3 |
| 9) 2 | 19) 2 | 29) 1 | 39) 1 |
| 10) 1 | 20) 4 | 30) 3 | 40) 2 |

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் - 25 விடைகள் (பகுதி II)

1) 1.மாணவப் பருவம்
2.கருத்தூன்றி
3. பிரியோசனம்
4.அரியது
5.நல்ல நண்பன்
6.நல்ல

2) 1.பொன் விழா
2.ஐங்குரவர்
3.அகராதி

3) 1.வாழ்
2.அறியாமல்

4) 1.இவைஎன்ன?
2.நீங்கள் எனக்குஉதவமுடியுமா?

5) please open the door

6) எனக்கு இந்தப் பாடத்தைசொல்லித் தாருங்கள்

7) வேகயென்னதுவன்ன்/இக்மனின் துவன்ன

8) உங்கள் சுகம் எப்படி?
நல்லசுகம்

9) ஒடுக்கி, விரல்களை, மடித்து

10) நேராகமுன்னோக்கி,திறந்தபடி

11) 4

12) 1

13) 2

14) 2

15) 3

16) 4

17) 7 cm

18) 3

19) 2

20) 2

21) 4

22) 4

23) 2

24) 1

25) 4

26) 3

27) 4

28) 3

29) 2

30) 4

31) 4

32) 3

33) 3

34) 4.10
16.1

35) ¾

36) 80

37) 540
108

38) 2

39) 1

40) 4

41) 3

42) 1

43) 2

44) ரூ 315
ரூ105

45) 14:15
7 மணித்தியாலம் 25 நிமிடம்

46) 3

47) ஞாலத்தில்/ஞாலத்தின்

48) சத்தியசோதனை

49) தெனாலிராமன்

50) பொருத்தமான ஐந்துவாக்கியம்






# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

பகுதி - I

வினாத்தாள் 27

➢ சரியான விடையின் கீழ் கோடிடுக

1)




A B C D E F

1.
A - F
B - D
C - E

2.
A - D
B - F
C - E

3.
D - C
B - A
F - E

2) வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க




1


2


3

3) வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை எழுதுக

253 + 265 = 352 +............

1. 156 2.166 3. 157

4) தரப்பட்ட எண்கோலத்தில் X என்ற இடத்தில் வரவேண்டிய எண்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 4 | 8 | 12 | 16 | 20 | 24 | X | 32 | 36 |


1. 28   2. 26   3. 32

5) வைத்தியர் வழங்குவது சிகிச்சை எனின், நீதிபதி வழங்குவது

1. தீர்ப்பு
2. தண்டனை
3. விடுதலை

6) தோட்டத்திற்கு வேலிபோல வயலிற்கு

1. நிலம்
2. வரம்பு
3. எல்லை

7)  இவ்வுருவை கோட்டின் வழியேவெட்டும் போது வெட்டப்பட்ட இடத்தில் கிடைக்கும் உருவம்?



1   2   3





➢ கீழேயுள்ள விவரங்களை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடைதருக

பேருந்தொன்றில் இருந்த பயணிகளில் முதலாவது பேருந்துத் தரிப்பிடத்தில் 8 ஆண்களும் 12 பெண்களும் இறங்கிச் சென்றனர். இரண்டாவது தரிப்பிடத்தில் 9 ஆண்களும் 7 பெண்களும் இறங்கிச் சென்றபின் பேருந்துத் தரிப்பிடத்தில் 9 ஆண்களும் 7 பெண்களும் இறங்கிச் சென்றபின் பேருந்தில் 5 பயணிகள் எஞ்சியிருந்தனர்

8) முதலாவது பேருந்துத் தரிப்பிடத்தில் பேருந்து நிறுத்தப்படுவதற்கு முன்னர் பேருந்தில் இருந்த மொத்த பயணிகள் எண்ணிக்கையாது?

1.33   2.35   3.37

9) பேருந்தில் இருந்த மொத்த பெண்களின் எண்ணிக்கை

1. 15   2.18   3. 17

10) மூன்று சொற்கள் குறியீடுகளில் எழுதப்பட்ட முறை கீழே தரப்பட்டது

▲ ● ★ = OUT   ☼ ☺ ▽ = SAD   ↑ → ← =WEB

TAB என்ற சொல்லை உருவாக்கத் தேவையான உருக்கள்

1. ▲ ☺ ←   2. ★ ☺ ←   3. ← ▽ ★


“செய்தித்தாள்” என்ற சொல்லைப் பயன்படுத்தி கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக

11) வைத்தியசாலையில் பணிபுரிபவர் ..............................................

12) எழுதுவதற்குப் பயன்படுவது ....................................................

13) அந்தப் பெட்டியில் ( நாற்பது, நாப்பது ) ........................ முட்டைகள் உள்ளன

# கனடாவில் ஐஸ் ஹொக்கி வீரர்கள் சென்ற பஸ் விபத்தில் சிக்கியதில் 14 பேர் உயிரிழப்பு



ஒட்டாவா,ஏப்.09

கனடா நாட்டில் ஐஸ் ஹொக்கி வீரர்கள் சென்ற பஸ் எதிரே வந்த ட்ரக் உடன் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கனடா நாட்டில் ஓர் உள்ளூர் ஐஸ் ஹொக்கி போட்டியில் விளையாடுவதற்காக ஒரு ஜூனியர் அணி வீரர்கள் பஸ்ஸில் சென்றுள்ளனர். அவர்கள் சென்ற பஸ் சாஸ்கட்சேவான் மாகாணத்தின் திஸ்டேல் நகருக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த ட்ரக் உடன் நேருக்கு நேர் மோதியது.

இந்தக் கோர விபத்தில் 14 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மூன்று பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அந்த பஸ்ஸில் 28 பேர் பயணம் செய்துள்ளனர்.

விளையாடச் செல்லும் வழியில் பஸ் விபத்தில் சிக்கி, ஹொக்கி வீரர்கள் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

விபத்தில் சிக்கி ஐஸ் ஹொக்கி வீரர்கள் 14 பேர் பலியானமைக்கு அமெரிக்க அதிபர் ட்ரம்ப் இரங்கல் தெரிவித்துள்ளார்.

## டூமா நகரம் சிரிய படையினரால் முற்றுகை:

# நச்சு வாயுத் தாக்குதலில் 70 பேர் பரிதாபச் சாவு





பெய்ரூட், ஏப்.09

சிரியாவின் கிழக்கு கூட்டா பகுதியில், கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள கடைசி நகரமான டூமாவில் நடத்தப்பட்ட நச்சு வாயு தாக்குதலில் 70 பேர் உயிரிழந்துள்ளனர் என மீட்புக்குழுவினர் மற்றும் மருத்துவக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து டுவீட் செய்துள்ள தன்னார்வ மீட்புப் படையினரான ''தி வைட் ஹெல்மட்ஸ்'' குழு, கட்டடத்தின் அடித்தளத்தில் பல சடலங்கள் உள்ள புகைப்படங்களைப் பகிர்ந்துள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த அறிக்கைகள் இன்னும் தனிப்பட்ட முறையில் சரிபார்க்கப்படவில்லை.

இரசாயனத் தாக்குதல் நடத்தியதாகத் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள சிரிய அரசு, அவை ஜோடிக்கப்பட்டவை என்று தெரிவித்துள்ளது.

அறிக்கைகளை கண்காணித்து வரும் அமெரிக்க அரசுத்துறை, தாக்குதல்களில் இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டு இருந்தால், சிரிய அரசுடன் இணைந்து போராடும் ரஷ்யாதான் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும் என்று கூறியுள்ளது.


இறுதியில், இரசாயன ஆயுதங்கள் வைத்து எண்ணற்ற சிரிய மக்களை தாக்கியமைக்கு ரஷ்யாவே பொறுப்பு என்று கூறப்பட்டுள்ளது.

நச்சு வாயுத் தாக்குதல் நடைபெற்றதாக கூறப்படும் நிலையில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர் என கூட்டா ஊடக மையம் டுவிட்டரில் பதிவிட்டுள்ளது.

ஹெலிக்கொப்டர் மூலம் வீசப்பட்டதாகக் கூறப்படும் உருளை குண்டில் சரின் எனப்படும் நச்சு இருந்தது என அதில் தெரிவித்துள்ளது.

கிழக்கு கூட்டா பகுதியில், கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள கடைசி நகரமான டூமா, சிரிய அரசு படையினரால் முற்றுகையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# பாகிஸ்தானில் முன்னணி ரி.வி. சேவைகள் முடக்கம்



பின்னணியில் ராணுவம்?

பாகிஸ்தானில் பிரபலமான முன்னணி தொலைக்காட்சி நிறுவனத்தின் சேவைகளை இராணுவம் முடக்கியுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானில் சிவில் அமைப்புகள் மீது இராணுவம் தன் அதிகாரத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளது. இதனால் அங்கு செயற்படும் முன்னணி தொலைக்காட்சி சேவைகளை ராணுவம் முடக்கியுள்ளது.

இது தொடர்பாக 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு அந்தச் செய்தி சேவையின் தலைமை நிர்வாகி இப்ராகிம் ரகுமான் அளித்த பேட்டியில், எங்களது தொலைக்காட்சி ஒளிபரப்பு நாட்டின் 80 வீத பகுதிகளில் முடக்கப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார்.

இதற்கும் தனக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என்று பாகிஸ்தான் மின்னணு ஊடக ஒழுங்குமுறை ஆணையம் கூறுகிறது. ஆனால் ஜியோ சனல்களை தண்டிக்கும் விதமாக அவற்றின் ஒளிபரப்பை முடக்கி இருக்கிறார்களா என்ற கேள்விக்கு பதில் அளிக்காமல் இராணுவம் மௌனம் சாதித்து வருகிறது.

# ஜேர்மனியில் மக்கள் கூட்டத்தில் கார் புகுந்ததில் நான்கு பேர் பலி

பேர்லின், ஏப்.09

ஜேர்மனியின் முன்ஸ்டர் நகரில் மக்கள் கூட்டத்திற்குள் கார் புகுந்த விபத்தில் முதல் கட்டமாக 4 பேர் பலியாகியுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஜேர்மனியின் முன்ஸ்டர் நகரிதை குடும் பத்தினருடன் கழித்துக் கொண்டிருந்தனர். அங்குள்ள வீதி ஒன்றைக் கடப்பதற்காக பொதுமக்கள் கூட்டமாக நின்றிருந்தனர்.

அப்போது அங்கு வந்த வாகனம் ஒன்று வீதியைக் கடக்கவிருந்த மக்கள் கூட்டத்தின் மீது வேகமாக மோதியது. இந்த தாக்குதலில் 4 பேர் பலியாகி உள்ளனர். மேலும், இதில் 30 பேர் காயம் அடைந்துள்ளனர் என முதல் கட்டமாக தகவல் வெளியாகியுள்ளது.

இதில் வாகனத்தை ஓட்டி வந்தவர், மக்கள் கூட்டத்தின் மீது மோதியதும் துப்பாக்கியை எடுத்து தன்னைத்தானே சுட்டுக் கொண்டு இறந்தான் என்பதால் தற்கொலைப்படை தாக்குதலாக இருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து அந்த பகுதியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

பு

# தீப்பற்றி எரிந்த ட்ரம்ப் டவர்

நியூயோர்க், ஏப்.09


அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் உள்ள ட்ரம்ப் டவரின் 50ஆவது மாடியில் நேற்றுமுன்தினம் மாலை திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்புக்கு நியூயோர்க் நகரில் உள்ள மன்ஹாட்டன் பகுதியில் 58 மாடிகள் கொண்ட பிரமாண்ட கட்டடம் உள்ளது. இதில் மேற்பரப்பில் உள்ள 3 அடுக்குகளைத் தனது வீடாக மாற்றி வசித்து வருகிறார். அதிபர் பொறுப்பேற்ற ட்ரம்ப் பெரும்பாலும் வொஷிங்டன் நகரில் வசித்து வருகிறார்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் மாலை உள்ளூர் நேரப்படி 5.30 மணியளவில் ட்ரம்ப் டவரின் 50ஆவது மாடியில் திடீரென தீ பற்றியது. அங்கு பிடித்த தீ மளமளவென பரவியது.

தகவலறிந்து அங்கு ஐந்துக்கு மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் விரைந்து வந்தன. சுமார் 140இற்கும் மேற்பட்ட வீரர்கள் போராடி தீயை அணைத்தனர். இந்த தீவிபத்தில் சிக்கிய ஒருவர் படுகாயம் அடைந்து உயிருக்குப் போராடி வருகிறார் என முதல் கட்டமாக தகவல்கள் வெளியாகின.

ட்ரம்ப் டவரில் ஏற்பட்ட தீயைப் போராடி விரைவில் அணைத்த தீயணைப்புப் படை வீரர்களுக்கு ட்ரம்ப் டுவிட்டரில் நன்றி தெரிவித்துப் பதிவிட்டுள்ளார்.



தீ விபத்து ஏற்பட்ட நேரத்தில் ட்ரம்ப், அவரது மனைவி மற்றும் குடும்பத்தினர் வொஷிங்டனில் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நடிகர்கள் மௌனப் போராட்டம்

ரஜனி, கமல் பங்கேற்பு



காவிரி மேலாண்மை சபை அமைக்கவும், இரசாயன ஆலையை (ஸ்டெர்லைட்) மூட வலியுறுத்தியும் நடிகர் சங்கம் சார்பில் நடந்து வரும் மௌனப் போராட்டத்தில் நடிகர்கள் ரஜனி, கமல் பங்கேற்றனர்.

காவிரி மேலாண்மை சபை அமைக்க வேண்டும்எனமத்திய அரசைவலியுறுத்தியும், தூத்துக்குடி இரசாயன ஆலையை நிரந்தரமாக மூட கோரியும் தமிழ் திரையுலகினர் சார்பில் மௌனப் போராட்டம் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நேற்றுக் காலை தொடங்கியது.

நடிகர் சங்க தலைவர் நாசர் தலைமையில் நடக்கும் இந்த போராட்டத்தில் நடிகர் விஜய் முதல் ஆளாக கலந்து கொண்டுள்ளார். மேலும், விக்ரம், சூர்யா, தனுஷ், சிவகார்த்தி கேயன், விஜய்சேதுபதி, விஷால், கார்த்தி, பார்த் திபன், சிவகுமார் உள்ளிட்ட பல நடிகர் களும் ரேகா, தன்ஷிகா உள்ளிட்ட நடிகை களும், இசையமைப்பாளர் இளையராஜா, பாடலாசிரியர் வைரமுத்து, மதன் கார்க்கி உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

பின்னர், தீவிர அரசியலில் களமிறங்கி வரும் நடிகர்கள் கமல்ஹாசன் மற்றும் ரஜனி காந்த் ஆகியோர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

(ப)

# காவிரி மேலாண்மை சபை அமைக்காவிட்டால் மக்களின் கோபத்திற்கு மத்திய அரசு ஆளாகும்



ரஜனிகாந்த் எச்சரிக்கை

சென்னை, ஏப்.09

காவிரி மேலாண்மை சபை அமைக்காவிடில் தமி ழர்களின் கோபத்திற்கு மத்திய அரசு ஆளாக நேரி டும் என நடிகர் ரஜனிகாந்த் நேற்றுத் தெரிவித்துள் ளார்.

காவிரி மேலாண்மை சபை அமைக்க மற்றும் இரசாயன ஆலையை(ஸ்டெர்லைட்) மூட வலியு றுத்தி தமிழ் திரையுலகினர் சார்பில் நேற்று மௌனப் போராட்டம் வள்ளுவர் கோட்டத்தில் இடம்பெற்றது . இந்த போராட்டத்தில் கலந்து கொள்ள நடிகர் ரஜனிகாந்த் தனது இல்லத்தில் இருந்து புறப்பட்டார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

காவிரி மேலாண்மை சபை அமைக்க வலியுறுத்தி திரையுலகினர் நடத்தும்மௌனப் போராட்டத்தில் பங்கேற்கச் செல்கிறேன்

சபை அமைக்க வேண்டும் என நீதிமன்ற தீர்ப்பில் உறுதியாகக் கூறப்பட்டுள்ளது. காவிரி மேலாண்மை சபை அமைக்காவிடில் அனைத்து தமிழர்களின் கோபத்திற்கும், அதிருப்திக்கும் மத்திய அரசு ஆளா கும்.

கால் ஏக்கர், அரை ஏக்கர் நிலத்தை வாழ்வாதாரமாக கொண்டுள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போதைக்குத் தனியாகப் போராட்டம் எதுவும் நடத்தப்போவதில்லை. ஐ.பி.எல். போட்டிகளில் சென்னை அணி வீரர்கள் கறுப்பு சின்னம் அணிந்து விளையாடினால் நாடுமுழுவதும் கவனத்தை பெற லாம் எனத் தெரிவித்துள்ளார்.

# கர்நாடகாவில் கார் மீது பஸ் மோதி கோர விபத்து

சம்பவ இடத்திலேயே 4 பேர் பலி

தர்வாத், ஏப்.09

கர்நாடக மாநிலம் தர்வாத் பகுதி யில் கார் மீது பஸ் மோதிய விபத்தில் 4 பேர் பலியாகியுள்ளனர். மேலும் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கர்நாடக மாநிலம் அல்னாவார்-தர்வாத் பகுதிகளுக்கிடையே அமைந்துள்ள மாரகாட்டி என்னும் கிராமத்தின் அரு கில் கார் மீது பஸ் மோதிய பயங்கர விபத்தில் 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மேலும் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்ற பொலி ஸார் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர். மேலும் இறந்தவர்களின் விவரங்கள் இன் னும் வெளியாகவில்லை.

(ப)

# ஆசாராம் பாபு மீதான பாலியல் வழக்கு விசாரணைகள் நிறைவு

## ஏப். 25ஆம் திகதி தீர்ப்பு



சாமியார் ஆசாராம் பாபுவுக்கு எதிரான வன்புணர்வு வழக்கின் விசாரணைநிறைவடைந்ததை அடுத்து வருகிற 25ஆம் திகதிதி தீர்ப்பு வழங்கப் படும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

ராஜஸ்தான் மாநிலத்தில் ஆசிரமம் அமைத்துள்ள சர்ச் சைக்குரிய சாமியார் ஆசாராம் பாபு(வயது75) என்பவர் தன்னை பாலியல் பலாத்காரம் செய்த தார் என குஜராத் மாநிலம் சூரத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் முறைப்பாடு அளித்தார்.

அதில், கடந்த 2001 மற்றும் 2006ஆண்டுக்குஇடைப்பட்ட காலங்களில் ராஜஸ்தான் மாநிலம், ஜோத்பூரில் உள்ள ஆசாராம் பாபுவின் ஆசிரமத் தில் இச்சம்பவம் நடைபெற்ற தாக பாதிக்கப்பட்ட பெண் முறைப்பாடு தெரிவித்தி ருந்தார்.

இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்து விசாரித்த பொலி ஸார் ஆசாராம் பாபுவை கடந்த 2013ஆம் ஆண்டுசெப்ரெம்பர் மாதம் கைது செய்தனர். தற் போது ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜோத்பூர் சிறையில் அவர் அடைக்கப்பட்டுள்ளார். இதுதவிர, குஜராத் மாநிலத்தில் இரு சிறுமிகளை வல்லுறவுக் குட்படுத்தியமை உள்ளிட்ட குற்றச் சாட்டுகளின் அடிப் படையில் குஜராத் மாநிலத் திலும் இவர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளாக ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜோத்பூர்சிறையில் அடைக்கப் பட்டுள்ள இவரை பிணையில் விடுவிக்க கோரி தாக்கல் செய் யப்பட்ட பல மனுக்கள் தள்ளு படி செய்யப்பட்டன. ஆசாராம் பாபுவுக்கு எதிராக ராஜஸ்தான், குஜராத் மாநி லங்களில் உள்ள நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், குஜராத் மாநிலம், சூரத் நகரை சேர்ந்த இரு சகோ தரிகள் வன்புணர்வு வழக் கில் பாதிக்கப்பட்ட இரு பெண் கள் மற்றும் மேலும் 46 சாட்சி களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படாத நிலையில் அரசுதரப்பு சாட்சிகளில் இரு வர் மர்மமான முறையில் கொல லப்பட்டனர். ஆசாராம் பாபு வின் பிணையில் மனு தொடர் பான விசாரணையின்போது இதை எல்லாம் சுட்டிக்காட்டிய உச்ச நீதிமன்றம், குஜராத் நீதிமன்றில் இந்த வழக்கின் விசாரணை நடைபெற்றுவரும் வேகத்துக்கு கடந்தாண்டு ஏப் ரல் மாதம் 12ஆம் திகதி அதி ருப்தி தெரிவித்திருந்தது.


பாதிக்கப்பட்ட பெண்களிடம் இருந்து இன்னும் வாக்குமூலம் பதிவு செய்யப்படாததை அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ள உச்சநீதிமன்றம், இவ்வழக்கின் விசாரணையை விரைவுப் படுத்துமாறும், விசாரணையின் முன்னேற்றம் தொடர்பாக உச்ச நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறும் நீதிபதிகள் உத் தரவிட்டனர்.

இந்த நிலையில், ஜோத்பூர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த இந்த வழக்கின் விச ாரணை நிறைவடைந்துள்ளது எனவும், இந்த வழக்கின் தீர்ப்பு வருகிற 25ஆம் திகதி அறிவிக் கப்படும் எனவும் ஜோத்பூர் நீதிமன்றம் நேற்று அறிவித் துள்ளது.

(ப)

# இப்போது நினைத்தால் கூட என்னால் பிரதமராக முடியும்

## பாபா ராம்தேவ் பரபரப்புப் பேட்டி



பனாஜி, ஏப்.09

கோவாவில்நடந்தநிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய பாபா ராம்தேவ், இப் போது நினைத்தால் கூட என்னால் பிரதமர் ஆக முடி யும் என பரபரப்புப் பேட்டி யளித்துள்ளார்.

பாபா ராம்தேவின் பதஞ் சலி நிறுவனம் தற்போது இந்தியா முழுவதும் பிரபல மாகி இருக்கிறது. மத்தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த நிறுவனம் பெரிய அளவில் வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த நிறுவனத்தின் திடீர் வளர்ச் சிக்கு பின் பா.ஜ.க. இருப்ப தாக குற்றச்சாட்டு எழுந்து வந்தது.

இந்த நிலையில் கோவா வில் நடந்த ஒருநிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர்,

நான் நடத்தும் நிறுவனத் தில் இருந்து எப்போதும் எனக்கு வருமானம் தேவைப் பட்டது இல்லை. நான் இதை பொது நல நோக்கத் தோடு மட்டுமே செய்கி றேன். மக்களுக்கு நல்ல தரமான பொருள்கள் செல்ல வேண்டும் என்பதற்காக மட் டுமே நான் இந்த பொருள் களை விற்பனை செய்கி றேன்.

நான்நினைத்து இருந்தால் பிரதமராகி இருக்க முடியும். பா.ஜ.க.வில் எனக்கு அதற் கான வாய்ப்பு இருக்கிறது. கட்சி அலுவலகம் திறந்து முதலமைச்சராகவோ, எம்.பி யாகவோ, பிரதமராகவோ முடியும். எனக்கு அதற்கான வாய்ப்புகள் இருக்கிறது. ஆனால் எனக்கு எப்போதும் பிரதமராக விருப்பமில்லை. எனக்கு அரசியலில் ஈடுபட விருப்பம் இருந்ததே இல்லை. நான் இப்படியே மக்களுக்குச் சேவை செய்ய வும், பதஞ்சலி மூலம் பொருள் கள் விற்கவும் விரும்புகி றேன் என்று தெரிவித்துள் ளார்.



# வெற்றியை சென்னை சூப்பர் கிங்ஸ் ரசிகர்களுக்கு அர்ப்பணிக்கிறோம்

## பிராவோ

ஐ.பி.எல். 11ஆவது சீசனின் முதல் ஆட்டத்தில் பெற்ற வெற்றியை சென்னை சூப்பர் கிங்ஸ் ரசிகர்களுக்கு அர்ப்பணிக்கிறோம் என்று பிராவோ தெரிவித்தார்.

ஐ.பி.எல். 11ஆவது சீசன் நேற்று மும்பை வான்கடே மைதானத்தில் தொடங்கியது. முதல் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் – சென்னை சூப்பர் கிங்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

முதலில் களம் இறங்கிய மும்பை இந்தியன்ஸ் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 165 ஓட்டங்கள் சேர்த்தது. பின்னர் 166 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி களம் இறங்கியது. மும்பை வான்கடே மைதானத்தில் 166 ஓட்டங்கள் என்பது மிகப்பெரிய சேஸிங் ஓட்டம் கிடையாது. இருந்தாலும் மும்பை அணியின் ஹர்திக் பண்டையா, மயாங்க் மார்கண்டே தலா 3 விக்கெட்டுகள் வீழ்த்தி சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு நெருக்கடி கொடுத்தனர்.

ரெய்னா (4 ஓட்டங்கள்), டோனி (5 ஓட்டங்கள்), ஜடேஜா (12 ஓட்டங்கள்) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தமையால் சென்னை சூப்பர் கிங்ஸ் 16.3 ஓவரில் 118 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 8 விக்கெட்டுகளை இழந்தது.

9ஆவது விக்கெட்டுக்கு பிராவோ உடன் இம்ரான் தாஹிர் ஜோடி சேர்ந்தார். அப்போது சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் வெற்றிக்கு 21 பந்தில் 49 ஓட்டங்கள் தேவைப்பட்டன. பிராவோ அதிரடியாக விளையாடி 30 பந்தில் 3 பவுண்ரி, 7 சிக்ஸர்கள் விளாசி 68 ஓட்டங்கள் சேர்த்து அணியின் வெற்றிக்கு உதவி புரிந்தார்.

68 ஓட்டங்கள் குவித்த பிராவோ ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார்.

இது பற்றி பிராவோ கூறுகையில் –

இது ஒரு மிகச்சிறந்த வெற்றி. சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் ரசிகர்களுக்கு இந்த வெற்றியை அர்ப்பணிக்கிறோம். சி.எஸ்.கே. என் மீது அதிக அளவில் நம்பிக்கை வைத்திருந்தது. வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொண்டேன். களத்தில் நிலைத்து நிற்க அதிக நேரம் கிடைத்தது. வான்கடே மைதானம் சிறியது. என்னுடைய திறமை மீது நம்பிக்கை வைத்து, இன்றைய நாள் என்னுடையதாக அமைந்ததை பயன்படுத்தி மகிழ்ச்சியாக விளையாடினேன் என்றார்.

(பு)



# 400 எண் கொண்ட ஜேர்சி ஏன்?

## ரகசியம் உடைத்த பிராவோ

நேற்று முன்தின ஆட்டத்தில், மும்பை இந்தியன்ஸ்அணிவீரர்கெய்ரன்பொலாட், சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர் டிவைன் பிராவோ ஆகியோர் 400 எண் அச்சிடப்பட்ட ஜேர்சியை அணிந்து விளையாடியுள்ளார்கள்.

இது ரசிகர்கள் அனைவருக்கும் வியப்பாக இருந்தது. போட்டி முடிந்த பின்னர் இது பற்றி பிராவோவிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர்.

நானும், பொலார்ட்டும் மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்தவர்கள் என்ற போதிலும் இருவரும் இப்போது வெவ்வேறு அணிக்காக ஆடிக் கொண்டிருக்கிறோம். ஆனாலும், இருவருக்கும் ரி – 20 போட்டியில் ஓர் ஒற்றுமை இருக்கிறது.

ரி – 20யில் 400 போட்டிகளில் விளையாடிய முதல்வீரர்பொலார்ட்என்ற பெருமை அவருக்கு இருக்கிறது. அதே போல ஒட்டுமொத்தமாக அனைத்து நாட்டு லீக், மற்றும் ரி – 20 போட்டிகளில் 400 விக்கெட்டுகளை வீழ்த்திய முதல் வீரரும் நான் தான்.

இந்த சாதனையை குறிப்பிடவே நாங்கள் இருவரும் 400 எண் அச்சிடப்பட்ட ஜேர்சியை அணிந்து விளையாட வேண்டும் என்று எங்களுக்குள் பேசி முடிவெடுத்தோம். அதன்படி முதல் போட்டியில் அது போல் அணிந்து விளையாடினோம் என்று கூறியுள்ளார்.

# பயிற்சி எடுப்பதில்லை

## டோனி

இந்திய அணியின் முன்னாள் தலைவர் டோனி விக்கெட் கீப்பர் பயிற்சியை மைதானத்தில் எப்போதும் எடுத்ததில்லை எனக் கூறியுள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் தலைவரான டோனி எந்நாளும் மக்களின் தல என்னும் பாராட்டைப் பெற்றவர்.

மிகச் சிறந்த வீரர் மட்டுமல்லாத இவர் மிகச் சிறந்த விக்கட் கீப்பர் என்பது ஊரறிந்த உண்மை.

தனது விக்கெட் கீப்பிங் வெற்றிக்கான ரகசியத்தை சமீபத்தில் கூறியுள்ளார்.

வழக்கத்திற்கு விரோதமான வகையில் தான் விளையாடுவதுதான் தனது ரகசியம் என்கிறார் டோனி.

தனது 9 வருட கால ஐ.பி.எல். வரலாற்றில் பயிற்சிகளின் போது கீப்பிங் பயிற்சியைத் தான் செய்வதில்லை என்று கூறியுள்ளார்.

விக்கட் காப்பாளர் எனும் விஷயம் மைதானத்தில் பயிற்சி செய்து வருவதில்லை எனக் கூறும் டோனி இதற்குப் பயிற்சி தேவையில்லை,சரியான பந்துகள் வரும்போது அதைப் பிடிக்காமலிருப்பதுதான் தவறு என்கிறார்.

அதேபோல ஸ்டம்பிங் மற்றும் கேட்ச்களின் போதும் கவனமாகக் கையாள்வது அவசியம் என்றும் கூறியிருக்கிறார்.

சரியான முறையில் கையாளப்படும் ஸ்டம்பிங் மற்றும் கேட்ச்கள் அணிக்கு சிறந்த திருப்பத்தைத் தரும் என்பதால் இப்படிப்பட்ட வழியில் செயல் புரியும் கீப்பர்கள்தான் திறமையான கீப்பர்கள் என்றும் கூறினார்.

உலக அளவில் சிறந்த விக்கட் கீப்பர் என்கிற பட்டியலில் டோனியின் இடம் மூன்றாவது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



### இங்கிலீஷ் பிரீமியர் லீக்:

# 3:2 என வென்றது மான்செஸ்டர் யுனைடெட்

இங்கிலீஷ்பிறீமியர்லீக்கில்போக்பாவின் சிறப்பான ஆட்டத்தால் மான்செஸ்டர் சிட்டியை 3:2 என வீழ்த்தியது மான்செஸ்டர் யுனைடெட் .

இங்கிலீஷ் பிறீமியர் லீக் உதைபந்துத் தொடரில்நேற்றைய ஆட்டம் ஒன்றில் மான்செஸ்டர் சிட்டி – மான்செஸ்டர் யுனைடெட் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இந்த போட்டியில் வெற்றி பெற்றால் சம்பியன் பட்டத்தை உறுதி செய்துவிடும் என்பதால் மான்செஸ்டர் சிட்டி அணி வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் களம் இறங்கின.

சொந்த மண்ணில் விளையாடிய மான்செஸ்டர் சிட்டி முதல் பாதி நேரத்தில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அந்த அணியின் வின்செண்ட் கொம்பானி 25 ஆவது நிமிடத்திலும், குண்டோகன் 30ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். இதனால் முதல் பாதி நேரத்தில் மான்செஸ்டர் சிட்டி 2:0 என முன்னிலைபெற்றது.

2ஆவது பாதி நேரத்தில் மான்செஸ்டர் யுனைடெட் வீறுகொண்டு எழுந்தது. 53 ஆவது மற்றும் 55ஆவது நிமிடத்தில் அடுத்தடுத்து போக்பா கோல் அடித்து அசத்தினார். 69ஆவது நிமிடத்தில் கிறிஸ்ஸ்மா லிங் மேலும் ஒரு கோல் அடித்தார். இதனால் மான்செஸ்டர் யுனைடெட் 3:2 என வெற்றி பெற்றது.

IPL 2018

SUNRISERS HYDERABAD VS RAJASTHAN ROYALS

இன்று

09.04.2018

இரவு 8 மணி

## தீர்வுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிகரமாகத் தோற்கடித்து, தமது நல்லாட்சி அரசுக்குப் புத்துயிரூட்டியிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, அதையொட்டி முதல்வர் விக்னேஸ்வரன் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார். அதிலேயே இந்த விடயத்தை அவர் தெரிவித்திருக்கின்றார்.

அந்த வாழ்த்துச் செய்தியின் முழு விவரம் வருமாறு :-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவரது வெற்றிக்காக வாழ்த்துகிறேன். இது அவர் மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வாக்கெடுப்பு குறிப்பாக சிறுபான்மைக் கட்சிகளின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் ஒன்று.

நல்லாட்சி அரசு தொடர வேண் டும் என்பது இப்போது தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

மேன்மையான நாட்டை உருவாக்கும் உளப்பூர்வமான முயற்சிகளை இதிலிருந்து நல்லாட்சி அரசு ஆரம்பிப்பதற்கான நேர மிது.

பிரதமர் அவர்கள் கவனிக்க வேண்டிய இரண்டு முக்கிய விடயங்கள் உண்டு. அவற்றை அவர் கவனத்தில் கொண்டுள்ளாரா என நான் சந்தேகப் படுகின்றேன்.

பொருளாதார நன்மைகள் சிறுபான்மையினருக்குத் தாராளமாகக் கிட்டுமானால், அவர்கள்தாமாகவேநாட்டின்பிரதான வாழ்வுக்குள் தங்களை இரண்டறக் கலந்துவிடுவர் என அவர் கருதுகின்றார். ஏனைய சிறுபான்மையினத்தவருக்கு இது பொருத்தமாக இருக்கக்கூடும். ஆனால் நிச்சயமாக இது தமிழரைப் பொறுத்தவரை சரிவராது.

நினைவுக்கு எட்டாத காலம் முதல் வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழர்களாகிய நாங்கள் 1833 இல் இங்குசிறுபான்மையினராக்கப் பட்டோம் என்ற உண்மை எங்களுக்குள் எப்போதும் உணர்வாக உள்ளது.

ஆகையினால், வடக்கு, கிழக்கில் பெரும்பான்மை இனத்தவராக வாழ வழி செய்யப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கும் நாம், அதேசமயம், வடக்கு, கிழக்குக்குள் வாழும் தமிழ்ப் பேசும் முஸ்லிம் சகோதரர்களுக்கு தனியான அலகு ஒன்றை உருவாக்கி வழங்கப்படுகின்றமையையும் விருப்போடு வரவேற்கின்றோம்.

ஆகையினால், தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது முதலாவது அதிகமுக்கியமான விடயம். தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான களத்தை வெளிப்படையாகத் தயார் செய்வதற்கான நேரம் இதுதான்.

பொது எதிரணியின் எல்லா எதிர்பார்ப்பும் சிதைந்து போய்விட் டது. ஆகையினால் தேசிய இனப்பிரச்சினையைத் தைரிய மாகத் தீர்ப்பதற்கு உகந்தநேரம் இதுவே. அதற்குப் புலம்பெயர் மக்களிடமிருந்தும் சர்வதேசத்திடமிருந்தும் அபரிமிதமான ஆத ரவும் வரவேற்பும் கிடைக்கும்.

ஒரு தேசத் தலைவனாக விரைந்து செயற்பட வேண்டிய விடயத்தைக் கவனத்தில் கொள்ளாமல் புறமொதுக்கி, எதிரணியின் அரசியல் எதிர்பாப்புகளுக்குத் தீனி போடுவது போல நடந்து கொள்வது பயனற்றது.

13 ஆவது திருத்தத்தை நாடு முழுவதுமே நடைமுறைப் படுத்துவன் மூலம் தமது மாமனார் ஜே.ஆர். ஜெயவர்த்தனா கையாண்ட தந்திரத்தை அவர் அறிந்திருந்திருக்கின்றாரா என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டிருக்கின்றது.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தாம் தமிழருக்கென ஏதும் செய்யவில்லை, முழு நாட்டுக்குள்ளேயுமே அதிகாரங்களைப் பகிர்ந்திருக்கின்றேன். எனக் கூறினார்.

இரண்டு அல்லது மேற்பட்ட மாகாணங்கள் விரும்பினால் ஒன்றிணையக் கூடியதான ஏற்பாட்டுடன் முழுத் தீவுக்குமே பொருத்தமானதாக சமஷ்டிக் கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதன் மூலம், ஜெயவர்த்தனாவின் அதே பாணியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏன் கைக்கொள்ளக்கூடாது என நான் வினவுகிறேன்.

எது, எப்படியாயினும் நல்லாட்சி அரசு இன்னும் அதிகாரத்தில் உள்ளமையால் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு மிக உகந்த சந்தர்ப்பம் இதுதான்.

இந்த நேரத்தில் தைரியமான முடிவு எடுப்பதுதான் முக்கியம்.

தமது புது முயற்சியில் பிரதமர் மேன்மை பெற வாழ்த்துகிறேன்.

– என்று உள்ளது. (உ)

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போரின்போதும் அதன் பின்னரும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தீர்வும் எட்டப்படவில்லை. இது தொடர்பாக எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே ராஜித மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

காணாமல் போனவர்களுக்கு மரணசான்றிதழ்வழங்க முடியாது. காரணம், கடந்த 1971 இல் ஏற்பட்ட கிளர்ச்சியின்போது காணாமல் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்கப்பட்டது. ஆனால், அவர்களில் சிலர் வெளிநாடுகளில் வாழ்கின்றமை பின்னர் கண்டறியப்பட்டது. ஆனால் நாம் வழங்கிய மரண சான்றிதழை மீளப் பெறுவதற்கான சட்ட ஏற்பாடுகள் இல்லை.

இந்நிலையில், நாம் வேறு ஏதாவது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம். குறிப்பாக, தற்காலிகமான சான்றிதழ்களைவழங்குவது குறித்து ஆலோசித்து வருகின்றோம். இந்தச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி அரசு வழங்கும் நட்ட ஈடுகள் உள்ளிட்டவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

காணாமல்போனவர்களின் உறவினர்களை நான் யாழ்ப்பாணத்தில் இரண்டு தடவைகள் சந்தித்தேன். அவர்களது பிரச்சினை, தமது உறவுகள் இறந்துவிட்டால் அவர்கள் இறந்துவிட்டனர் என்று கூறுமாறும் உறுதிப்படுத்துமாறும் கோரினர். ஆனால், சட்டரீதியாக உறுதிப்படுத்த முடியாத நிலை உள்ளது. ஆகவே, தற்காலிக சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வார்களாயின் இறந்த தமது உறவினர்களுக்கான இழப்பீடுகளை பெற்றுக்கொள்ளலாம். – என்றார். (ஐ)

## சுமந்திரனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவல்ல. அத்தகைய விவகாரம் எதையும் கூட்டமைப்பு ஒன்று கூடி ஆராயவோ முடிவெடுக்கவோ இல்லை."

– இப்படி நேற்று 'காலைக் கதிர்' நாளிதழுக்குத் தெரிவித்தார்புளொட் அமைப்பின்தலைவரும் யாழ். மாவட்ட எம்.பியுமான த.சித்தார்த்தன்.

சுமந்திரன் எம்.பியின் அறிவிப்புக் குறித்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் இவ்விடயம் குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மேற்படி முடிவை தமது கருத்தாக சுமந்திரன் கூறியிருப்பார் என்றே நினைக்கிறேன். இதனைக் கூட்டமைப்பின் முடிவாக அவர் வெளியிட்டிருந்தால் அது தவறு.

அத்தகைய விவகாரம் எதையும் கூட்டமைப்பு ஒன்று கூடி ஆராயவோ, தீர்மானிக்கவோ இல்லை.

அத்தகைய விடயத்தை – முதல்வர் வேட்பாளர் விவகாரத்தை – இப்போது பேசுவது காலம் முந்திய செயலாகும்.

அரசியல் விவகாரங்கள் கட்டவிழும்போக்கைப்பார்க்கும் போது வடக்கு மாகாணசபைத் தேர்தல் உரிய காலத்தில் நடைபெறுமா என்பது சந்தேகமாகவே உள்ளது.

வடக்கு மாகாணசபை வரும் செப்ரெம்பரில் காலாவதியாகிறது.

உடனடியாகத் தேர்தல் நடக்குமா என்பது சந்தேகமாகவே உள்ளது. மாகாணசபைத் தேர்தல் சட்டத்தை முழுமையாக்குவதில் இன்னும் இழுபறி நீடிக்கின்றது. பெரும்பாலும் இந்தத் தேர்தல் அடுத்த மார்ச் வரை கூடத் தள்ளிப் போகலாம்.

சுமார் ஒரு வருடத்துக்குப் பின்னர் நடைபெறக் கூடிய தேர்தலுக்கு இப்போது ஏன் இந்த முன்னறிவிப்பு எல்லாம்? அதற்கிடையில் பல விடயங்கள் நடந்தேறிவிடலாம். ஆகவே இது காலம் முந்திய – அவசரப்பட்ட – அறிவிப்பே.

– இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ)

## தகுதியற்றவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சம்பந்தன் அரசுக்கு ஆதரவாகச் செயற்பட்டுவரும் ஒருவர் என்பது தற்போது தெளிவாகத் தெரிந்து விட்டதாகச் சுட்டிக்காட்டிய தினேஷ் குணவர்தன, இதன் காரணமாக கூட்டு எதிரணியை, அரசின் எதிர்க் கட்சியாகக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களைக் கூட்டுஎதிரணிகொண்டுள்ளமையினால், எதிர்க்கட்சியாக வரும் தகுதி அதற்கு உண்டு எனவும் அவர் மேலும் கூறினார்.

அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைமைத்துவம் குறித்து அடுத்து வரும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது முடிவுகள் எடுக்கப்படும் எனவும், அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சம்பந்தனுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மானித்திருக்கின்றது என்று மிக நம்பகரமாக அறியமுடிகிறது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் இதற்கான ஆலோசனைகளில் ஈடுபட்டனர் எனவும் தெரிய வருகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற அந்தஸ்திலிருந்து எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆலோசனையைக் கேட்காமல் எதிர்ப்பை வெளியிட்டமை, ரணிலிடமிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காகத் தலா 2 கோடி ரூபா பெறப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம், அரசின் அநீதியான திட்டங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்காமை உட்பட பல காரணங்களைக் காட்டி இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது என்று மஹிந்த அணி முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகளைச் செய்து சட்ட ஆலோசனைகளைப்பெறும்நடவடிக்கைகள் தற்போது இடம்பெறுகின்றன எனவும் அறியமுடிந்தது.

## ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருந்தி அதிகார சபைக்குச் சொந்தமான பிக்கப் ரக வாகனம் என்பன மோதி விபத்துக்குள்ளானதில் இளம் பெண் ஒருவர்படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10.15 மணியளவில் இடம் பெற்றது.

தவசிக்குளம் வீதியில் இருந்து பயணித்த பிக்கப் வாகனம் தண்டவாளத்தைக் கடந்து ஏ-9 பிரதான வீதிக்கு வந்த போது காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த யாழ்தேவி ரயில் மோதியுள்ளது.

இதனால் வாகனத்தில் பயணித்த 18 வயது இளம்பெண்ணொருவர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார். அவர் சங்கத்தானைப் பகுதியைச் சேர்ந்தவர் என விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை வாகனத்தைச் செலுத்திச் சென்ற சாரதிக்கு எந்தவிதப் பாதிப்புக்களும் ஏற்படவில்லை.

படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஐ-7)

## பூநகரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுகாயமடைந்தார். அவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கிளிநொச்சி – பூநகரி வீதியில் குடமுருட்டி பாலத்துக்கு அருகில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாகனம்விபத்துக்குள்ளாகியது.

சம்பவத்தில் பூநகரிப் பிரதேச வைத்தியசாலை மருத்துவ அதிகாரியின் சகோதரன் சிறு காயங்களுக்குள்ளானார். எனினும், மருத்துவ அதிகாரியின் தாயார் படுகாயமடைந்த நிலையில் வீதியால் சென்றவர்களால் மீட்கப்பட்டு, பிரதேச வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். (ஐ-7)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுநராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், றெஜினோல்ட் குரேயே நீடிப்பார் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

எட்டு மாகாணங்களின் ஆளுநர்களுக்கு, விருப்ப அடிப்படையில், இடமாற்றங்களை வழங்க அரசு திட்டமிட்டது.

இந்த மாற்றங்களுக்கமைய, மேல் மாகாண ஆளுநர், கே.சி.லோகேஸ்வரன் வட மாகாண ஆளுநராக மாற்றம் பெற விருப்பம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், 9 மாகாணங்களின் ஆளுநர்களையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த 6ஆம் திகதி சந்தித்தார். இதன்போது வடக்கு மாகாண ஆளுநராக றெஜினோல்ட் குரே நீடிப்பார் என உறுதிப்படுத்தப்பட்டது எனத் தெரியவந்தது. (ஐ)

## எனக்கெதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மஹிந்த அணி கொண்டு வரவுள்ளதாக அறிவித்துள்ள நம்பிக்கையில்லாப்பிரேரணை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று மஹிந்த அணியால் கொண்டு வரப்படவுள்ளதாக அறியவந்துள்ளது. அவர்கள் முதலில் அதனைச் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கட்டும். அதன்பின்னர் அதற்கு நான் சபையில் தக்க பதிலடி கொடுப்பேன்.

பிரேரணைகளைக் கொண்டு வந்து குழப்பத்தை ஏற்படுத்தி ஆட்சியைப் பிடிக்க முயல்கிறது பொது எதிரணி. அதுதான் அவர்களின் வேலை. எனக்கு எதிரான பிரேரணை தோற்கடிக்கப்படும். அவர்களின் எண்ணம் ஒருபோதும் நிறைவேறாது. – என்றார். (ஐ)

## சிரேஷ்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் காரணமாகவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக அமைச்சர் மலிக் சமரவிக்ரமவின் இல்லத்தில், ரணில் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்களுக்கு இடையில் விசேட கூட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இதன்போது, ஜோன் அமரதுங்க மற்றும் காமினி ஜயவிக்ரம பெரேரா ஆகியோரைப் பதவியில் இருந்து நீக்கிவிட்டு இளைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரை அந்தப் பதவிகளில் அமர்த்த ரணில் ஒப்புதல் வழங்கியுள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது.

எனினும், இந்த முடிவுக்குக் கூட்டத்தில் கலந்துகொண்ட முக்கியஸ்தர்கள் சிலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் எனவும், கட்சியின் தலைமைப் பொறுப்பே மாற்றப்பட வேண்டும், மாறாக அமைச்சர்களை மாற்றம் செய்வது அவசியமற்றது எனப்பிரதமருக்கு அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது. (ஐ)

# பிரிட்டன் பிரதமர் அலுவலக தலைமை அலுவலரிடம் தமிழ் தகவல் நடுவத்தினரால் மனு கையளிப்பு!

லண்டன், ஏப்.09

பிரித்தானிய பிரதமர் அலுவலக தலைமை அலுவலரும், பிரித்தானிய தமிழர்களுக்கான அனைத்துக்கட்சிப் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மான முன்னாள் தலைவருமான ஹாவின் பர்வெலிடம் தமிழ் தகவல் நடுவத்தினர் மனு ஒன்றைக் கைய ளித்துள்ளனர்.

இதன்போது இலங்கைக்கான ஆயுத விற்பனையை பிரித்தானியா மேற் கொண்டு வருவதனால் இலங்கையில் ஏற்பட்டுள்ள அழிவுகள் மற்றும் பாதிப் புக்கள் சேகரிக்கப்பட்டு அவைகுறித்த தகவல்கள் அடங்கிய கைநூலானது கையளிக்கப்பட்டு, ஆயுத விற் பனையை நிறுத்துவதற்கு உதவுமா றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தற்போதைய தமி ழர்களுக்கான அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் தலைவர் போல் ஸ்கள்ளி மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசின் நாடா ளுமன்ற உறுப்பினர் நீதிராஜா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதனை தொடர்ந்து ஹவின் பர்வெல்லுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

(க -100)



## புதையல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது



கேகாலை பகுதியில் புதையல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அலு வலகம் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த இரக சிய தகவலையடுத்து மேற்கொள் ளப்பட்ட சுற்றி வளைப்பு தேடுதல் நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களி டமிருந்து அவர்கள் அகழ்விற்காக பயன்படுத்திய பொருள்கள் கைப் பற்றப்பட்டுள்ளன எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கைது செய்யப்பட் டவர்கள் 28 மற்றும் 57 வயதுடைய நபர்கள் என பொலிஸார் தெரிவித் தனர். சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## ஜனாதிபதி தலைமையில் தேசிய புத்தரிசி விழா!

கொழும்பு, ஏப். 09

தேசத்தின் மாபெரும் விவ சாய விழாவான தேசிய புத்தரிசி விழா ஜனாதிபதி மைத்திரி தலைமையில் வரலாற்று பிர சித்தி பெற்ற ஜய ஸ்ரீ மகாபோதி யில் நேற்று முற்பகல் இடம் பெற்றது.

சம்பிரதாயபூர்வமாக சிறு போகத்தின்போது அறுவடை செய்யப்பட்ட அரிசியை ஜய ஸ்ரீ மகாபோதிக்கு தானம் செய் யும் விழா அடமஸ்தானாதிபதி சங்கைக்குரிய பல்லேகம சிறி னிவாச நாயக்க தேரரின் ஆசீர் வாதத்துடன் விவசாய அமைச்சு மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்தினூடாக 51 ஆவது முறையாக ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

மன்னர் ஆட்சிக்காலம் முதல் இடம்பெற்றுவரும் இந்த நிகழ்ச்சியில் நாடுமுழுவதும் உள்ள பெருமளவு விவசாயிகள் கலந்துகொண்டமையுடன், உரிய காலத்தில் மழை கிடைக்க வும் நாடு விவசாயத்துறையில் செழித்து விளங்கவும் விவ சாயத்துறையில் நாடு தன்னிறை



வடைந்து சுபீட்சமான பொருளாதாரம் கிடைக்கவும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்லாசி வேண்டியும் பிரார்த் தனை இடம்பெற்றது.

புத்தரிசி விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி முதலில் ஜயஸ்ரீ மகாபோதியை வழி பட்டு ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டமையுடன், புத்தரிசி விழாவில் இணைந்து கொண் டார்.

(க)

## மாணவனின் தவறான முடிவு!

கிளிநொச்சி, ஏப். 09

யாழ்ப்பாணத்தில் கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 16 வயதான தியாகேஸ்வரன் நிலாபவன் உயிரிழந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வட்டக்கச்சி மகா வித்தியாலயத் தில் கற்ற தியாகேஸ்வரன் நிலாப வன், கடந்த க.பொ.த சாதாரண தரபரீட்சையில் சிறந்த பெறுபேறு களை பெற்றுள்ளார்.

இந்த நிலையில், வாந்தி எடுத்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், அவர் உயிரிழந்துள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணி அளவில் குறித்த மாணவன் வாந்தி எடுத்துள்ளார். அவரை கோப்பாய் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட போதும், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் அங்கு மேற்கொள் ளப்பட்ட பரிசோதனையின் போது அவர் உயிரிழந்து விட் டார் என்பதை வைத்தியர்கள் உறுதி செய்துள்ளனர்.

அவர் ஒரு வகை நச்சுத் திர வத்தை அருந்தி உயிரிந்துள்ளார் என்று விசாரணையில் தெரிய வருகிறது. ஆனால் அது என்ன திரவம் என்பது உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவர வில்லை.

மாணவன் அருந்தியது திரவம் என்பது பற்றி ஆராய அவரது உடற் பாகம் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளது. மரண பரிசோதனையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேம குமார் நடத்தினார்.

உயர் கல்வியை எங்கு தொடர் வது என்பது தொடர்பில் பெற் றோருக்கும் மாணவருக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் உயர் கல் வியை தொடர வேண்டும் என பெற்றோர் கோரிய போதும், வட்டக்கச்சியில் உயர் கல்வி கற்கப்போகின்றேன் என மாண வன் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பான வாதங்கள் இடம் பெற்ற நிலையில், மாண வனின் மரணம் சம்பவித்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவொரு தற்கொலையாக இருக்கலாம் என அறிவிக்கப் பட்ட போதிலும், மேலதிக விசா ரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# கோயில் கட்டுவதில் காட்டும் அக்கறையை விட சமயம் வளர்ப்பதில் காட்டும் அக்கறை குறைவு

### மட்டு. நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 09

கோயில்களைக்கட்டுவதில்காட்டுகின்ற அக்கறையை விட எமது சமயத்தை வளர்ப்பதில் காட்டுகிற அக்கறை குறை வாக இருக்கிறது என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ் வரன் தெரிவித்துள்ளார்.

இந்து கலாசார திணைக்களம் மட் டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இந்து ஆலயங்களை புனரமைக் கும் திட்டத்தின் கீழ் 73 இந்து ஆலயங் களுக்கு ஒரு கோடி 10 லட்சம் ரூபாவை வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு நாவற் குடா இந்து கலாசார நிலையத்தில் இடம் பெற்றது.

சிறைச்சாலைகள் மற்றும் மறுசீர மைப்பு புனர்வாழ்வு மீள்குடியேற்ற மற் றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் எந்திரி பி.சுரேஷ் தலை மையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில், அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்



வரன் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது வருமாறு:-

ஆலய தர்மகர்த்தாக்கள் ஆலயம் சிறிதாக இருந்தாலும் ஆன்மீகம் பெரி தாக இருத்தல் வேண்டும். கோயில் களைக் கட்டுவதில் காட்டுகின்ற அக் கறையை விட எமது சமயத்தை வளர்ப் பதில் காட்டுகிற அக்கறை குறைவாக இருக்கிறது. ஒரு ஊரில் ஆலயம் இருந்தால் ஏனைய சமயத்தவர்கள் வந்து எங்களது மக்களை மதம் மாற்ற அனுமதிக்கக் கூடாது. அது ஆலயத் தின் தலையாய கடமை.

சமயத்தை மட்டுமல்ல மக்களையும் வழிப்படுத்த வேண்டிய கடமை அவருக்கு இருக்கிறது. ஆகவே, ஆலய தர்மகர்த் தாக்கள் இதனை கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

நாங்கள் ஆலயத்திற்கு நிதியுதவி தேவை என்பதற்காக எங்களது சம யத்தை நிராகரிக்கின்றவர்களிடம் கையேந்திச் செல்லக்கூடாது. எத்த னையோ சமயங்கள் இருக்கின்றன. அவர்களது சமயத்திற்கு எதிரானவர் களிடம் உதவி கேட்கமாட்டார்கள். ஆனால் எங்கள் மக்கள் ஆலயத்தைக் கட்ட வேண்டும் என்பதற்காக சென்று பணம் கேட்கிறார்கள்.

ஆகவே, உங்களது கடமை ஆலயத் தின் ஆன்மீகத்தைக் காப்பது. ஆல யத்தை நல்ல ஆன்மீகக் கூடமாக மாற் றுங்கள். உங்களால் முடிந்தளவுக்கு சமூக சேவை செய்கின்ற நல்ல விடயங் களைக் கையாளுகின்ற இடமாக ஆல யங்களை மாற்ற வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir












இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.